
விலை ரூபா: 15.00

...ered as a Newspaper in Srilanka




# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 சித்திரை 10 வியாழக்கிழமை (23.04.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 125

# இலங்கையில் போரை நிறுத்த புதுடில்லி அவசரமாகக் கூடியது


## முக்கிய தலைவர்கள் பங்கேற்பு

(புதுடில்லி)

இலங்கையில் போரை நிறுத்துவது குறித்து பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் நேற்றிரவு அவசர கூட்டம் ஒன்று இடம் பெற்றது. இக் கூட்டத்திற்கு மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி, பாதுகாப்புதுறை அமைச்சர் அந்தோனி, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் ஆகியோர் கலந்து கொண்டனர். (10ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாதத்தை ஒழிக்க ஒரு சில மணிநேரமே உள்ளது

### பிரபாகரனுக்கு மன்னிப்பு இல்லை என்கிறார் ஜனாதிபதி



(கொழும்பு)

பயங்கரவாதத்தை ஒழித்து, ஒன்றுபட்ட இலங்கையை கட்டியெழுப்புவதற்கு இன்னும் ஒரு சில மணித்தியாலங்களே இருக்கின்றன.

இவ்வாறானதொரு வரலாற்று புகழ்மிக்க சந்தர்ப்பத்தில், ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் எதிர்க்கட்சி தலைவருடன் வெற்றுத்தனமான விவாதம் நடத்த எமக்கு நேரம் இல்லை என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (10ஆம் பக்கம் பார்க்க)



பாதுகாப்பு வலயப் பகுதியில் இருந்து இடம்பெயரும் மக்கள்.

## பசில் எம்.பி. இந்தியா விரைகிறார்

(கொழும்பு)

யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள அப்பாவி மக்களுக்குத் தேவையான நிவாரணப் பணிகளை மேற்கொள்வது குறித்து விவாதிப்பதற்காக இலங்கையின் சிறப்புத் தூதுவராக நாடாளுமன்ற உறுப்பினர் பசில் இந்தியாவுக்குச் செல்கிறார்.

புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிக்குள் இராணுவம் ஊடுருவி விட்டது. அங்கு சிக்கியிருந்த மக்களில் பெரும்பாலானோர் (10ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியிலிருந்து வந்த 9 ஆயிரம் பேர் யாழ்.நலன்புரி நிலையங்களில் தங்க வைப்பு

(சாவகச்சேரி)

வன்னியிலிருந்து இதுவரை சுமார் 9 ஆயிரத்து 900 பேர் இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம் வந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

வன்னியிலிருந்து கடந்த திங்கள், செவ்வாய் ஆகிய தினங்களில் 3 ஆயிரத்து 900 ஆயிரம் பேர் வரை படகுகள் மூலம் வடமராட்சிக்கு வந்தடைந்துள்ளதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

அத்துடன் நேற்றும் வன்னியிலிருந்து பெருமளவான மக்கள் வந்ததாகவும் அவர்களின் எண்ணிக்கை இன்னமும் தெரியவில்லை என்றும் யாழ்.அரச அதிபர் குறிப்பிட்டார்.

கடந்த நான்கு மாத காலப்பகுதிக்குள் இதுவரை 9 ஆயிரத்து (10ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவு பாதுகாப்பு வலயத்தின் மூன்றில் ஒரு பகுதி படையினர் வசம்

### அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

(கொழும்பு)

முல்லைத்தீவிலுள்ள மக்கள் பாதுகாப்பு வலயத்தில் மூன்றில் ஒரு பகுதியை படையினர் கைப்பற்றியுள்ளனர் என தேசிய பாதுகாப்புக்கான பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

நாட்டின் பாதுகாப்பு நிலைமை தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர்கள் சந்திப்பு நேற்றுக்காலை தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் நடைபெற்ற போதே அவர் இவ்வாறு கூறினார். இங்கு மேலும் (10ஆம் பக்கம் பார்க்க)

## ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோர் அரச கட்டுப்பாட்டுக்குள் வருகை

(கொழும்பு)

முல்லைத்தீவு பிரதேசத்தில் கடந்த திங்கட்கிழமை அதிகாலை முதல் படையினர் மேற்கொண்டுவரும் விசேட மீட்பு நடவடிக்கை காரணமாக நேற்று மாலை வரை சுமார் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான பொதுமக்கள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள மோதலற்ற பிரதேசத்திலிருந்து அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு வந்திருப்பதாக இராணுவ அதிகாரிகள் (10ஆம் பக்கம் பார்க்க)

### இராணுவம் அறிவிப்பு

## நிவாரணப் பொருள்களுடன் தமிழகத்தில் இருந்து கப்பல்

(சென்னை)

இலங்கை தமிழர்களுக்காக தமிழக அரசின் 6.46 கோடி ரூபாய் மதிப்பிலான 936 தொன் எடை கொண்ட நிவாரணப் பொருள்களுடன் எம்.வி. கிறீன் மாறல் கப்பல் நேற்று இலங்கை நோக்கி புறப்பட்டுள்ளது.

போரில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவ தமிழக அரசு கடந்த (10ஆம் பக்கம் பார்க்க)



## மக்கள் கொல்லப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது

### சொல்ஹெய்ம் தெரிவிப்பு

(ஒஸ்லோ)

விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கப் படைகளுக்கும் இடையிலான மோதல்களில் நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாதென நோர்வே தெரிவித்துள்ளது. இரு தரப்புக்கும் இடையிலான இறுதிக்கட்ட மோதல்களில் பொது மக்களுக்கு மேலும் (10ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு வலயம் மீது தாக்குதல் நேற்று 324 பொதுமக்கள் பலி

(வவுனியா)


முல்லைத்தீவு பாதுகாப்பு வலயப் பகுதிகள் மீது நேற்று மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 324 பொதுமக்கள் உயிரிழந்தனர். மேலும் 423 பேர் படுகாயமடைந்தனர்.

அம்பலவன்பொக்கணை, வலைஞர்மடம் மக்கள் வாழ்விடங்கள் மீது செறிவான ஆட்லறி எறிகணை, கொத்துக்குண்டு எறிகணை, பீரங்கி மற்றும் துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதல்களில் 324 பொதுமக்கள் உயிரிழந்ததுடன் 423 பேர் படுகாயமடைந்துள்ளனர். தேவாலய வளாகத்தில் மட்டும் 6 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 10 பேர் படுகாயமடைந்துள்ளனர். (10ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை விவகாரம் குறித்து விளக்கமளிக்க நம்பியார் மறுப்பு

## தனது பயணம் ரகசியமானதாம்



வடபகுதியில் நிலவி வரும் மனிதப் பேர வலம் குறித்து இலங்கைக்கு நேரில் வந்து ஆய்வு மேற்கொண்டு ஐ.நா. திரும்பியுள்ள ஐ.நா. இணை செயலாளர் விஜய் நம்பியார், தான் சென்று பார்த்தது, அறிந்தது குறித்து ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் விளக்க மறுத்து விட்டார் என தெரியவருகிறது.

இலங்கைப் பயணத்தை முடித்துக் கொண்டு நேரடியாக ஐ.நா. செல்லாமல் இடையில் இந்தியாவில் தங்கிச் சென்றுள்ளார் விஜய் நம்பியார் என்பது குறிப்பிடத்தக்கது.

பான் கீ மூன்தான், இலங்கை மனிதப் பேரவலம் குறித்து நேரில் அறிந்து கொள்வதற்காக நம்பியாரை அனுப்பி வைத்தார்.

அவரும் கொழும்பு சென்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரை சந்தித்துப் பேசினார்.

இந்த நிலையில் தான் போய் பார்த்து விட்டு வந்ததை விளக்குமாறு அவர் கேட்டுக் கொள்ளப்பட்டும், ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் அது குறித்து விளக்கம் அளிக்க விஜய் நம்பியார் பிடிவாதமாக மறுத்து விட்டாராம்.

கொழும்பிலிருந்து இந்தியா சென்ற போது இந்திய அரசுத் தரப்பில் விஜய் நம்பியாருக்கு நிர்ப்பந்தம் கொடுக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

கொழும்பு வந்திருந்த விஜய் நம்பியார் வன்னிப் பகுதிக்கு வரவேண்டும் என விடுதலைப் புலிகள் இயக்க அரசியல் பிரிவு தலைவர் பா.நடேசன் கோரிக்கை விடுத்திருந்தார்.

விஜய் நம்பியாரும் அந்தத்திட்டத்துடன் தான் இருந்தார். ஆனால் இலங்கை அரசு நம்பியாரை வன்னிக்குச் செல்ல வேண்டாம் என தடுத்து விட்டதாம்.

இலங்கை நிலைவரம் குறித்து ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் 15 உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளும் நம்பியாருடன் பேச ஒப்புக் கொண்டன.

ஆனால் நான் இலங்கை சென்றது ஒரு மீடியேட்டராக மட்டுமே. அங்கு அதிபர் ராஜபக்ஷவுடன் பேசியது குறித்து நான் வெளிப்படையாக சொல்ல முடியாது.

அது ரகசியமானது, ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலாக இருந்தாலும் கூட சொல்ல முடியாது என கூறி விட்டாராம் நம்பியார். (ச-5)

# புலிகளின் முக்கிய தலைவர்கள் இருவர் படையினரிடம் சரண்!

## பாதுகாப்பு அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் முக்கிய தலைவர்களான தயா மாஸ்ரர் மற்றும் ஜோர்ஜ் ஆகிய இருவரும் இராணுவத்தினரிடம் சரணடைந்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு வலயத்துக்குள் பிரவேசித்துள்ள இராணுவத்தின் 58ஆவது படைப் பிரிவினரிடம் புதுமாத்தளன் பகுதியில் வைத்து இவர்களிருவரும் சரணடைந்ததாக பாதுகாப்பு அமைச்சு கூறுகின்றது.

விடுதலைப் புலிகளின் ஊடகத்துறை பொறுப்பாளராகவும் அதன் பேச்சாளராகவும் செயல்பட்ட தயா மாஸ்ரர் புலிகள் இயக்கத்துக்கு பெரும் சேவையாற்றியவராவார்.

ஆங்கில மொழியில் சரளமாக பேசக்கூடிய ஜோர்ஜ், விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் மொழி பெயர்ப்பாளராகவும் செயல்பட்டு வந்தார்.

அரசாங்கத்துக்கும் புலிகளுக்குமிடையில் கடந்த 2002ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட யுத்தநிறுத்த காலத்தில் பிரபாகரனுடனான பேட்டியின் போது இவர் மொழி பெயர்ப்பாளராக் செயல்பட்டார் என்றும் அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை விடுதலைப்புலிகளின் முக்கிய தலைவர்களான தயா மாஸ்டர் மற்றும் ஜோர்ஜ் ஆகியோர் தாங்களாக முன்வந்து சரணடையவில்லை என்றும் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த போது இலங்கை இராணுவத்தினர் வலுகட்டாயமாக பிடித்து சென்றுவிட்டதாக புலிகள் தெரிவித்துள்ளனர். (எ-5)

# வவுனியா வைத்தியசாலைக்கு 230 வைத்தியர்கள் விரைவு

(கொழும்பு)

புதுமாத்தளன் பாதுகாப்பு வலயத்தில் காயமடைந்த மக்களுக்குச் சிகிச்சையளிப்பதற்காக230 வைத்தியர்கள் உடனடியாக வவுனியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் வவுனியா வைத்தியசாலையில் கட்டில்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுத்திருப்பதாக சுகாதாரத் துறை அமைச்சின் பேச்சாளர் கூறினார்.

இதேவேளை புதுமாத்தளன் பகுதியில் நடந்த மோதல்களில் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் 300 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந் தவர்களை விட 17 சடலங்களும் வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதில் 9 ஆண்களின் சடலங்களும் 8 பெண்களின் சடலங்களும் காணப்படுவதாக வைத்தியசாலை வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-5)

# எறிகணைத் தாக்குதலில் பங்குத்தந்தை படுகாயம்

(வவுனியா)

வலைஞர்மடம் தேவாலய பகுதியை நோக்கி நேற்று புதன்கிழமை மதியம் வீசிய ஆட்லெறி எறிகணைத்தாக்குதலில் தேவாலய வளவில் இருந்த பங்குத்தந்தை வண.பிதா ஜேம்ஸ் பத்திநாதர் படுகாயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து தெரிய வருவதாவது,

நேற்று நண்பகல் 12 மணியளவில் வலைஞர்மடம் இடம் பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் வாழ்விடங்களையும் தேவாலயப் பகுதியையும் நோக்கி ஆட்லெறி மற்றும் மோட்டார் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இத் தாக்குதல்களின் போதே குறித்த பங்குத் தந்தை படுகாயமடைந்துள்ளார். காயமடைந்த மதகுரு முள்ளிவாய்க்கால் தற்காலிக மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்டுள்ளார்.

இதேவேளை, நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமையும் வலைஞர்மடம் தற்காலிக மருத்துவமனைப்பகுதியை இலக்குவைத்துமேற்கொள்ளப்பட்ட எறிகணைத்தாக்குதலில்மருத்துவமனை வைத்தியர் மற்றும் மருத்துவபணியாளர்கள் உட்படஎட்டுபேர் படுகொலைசெய்யப்பட்டிரு ந்தமைகுறிப்பிடத்தக்கது. (ச-5)


## சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்

### விசேட அறிவித்தல்

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தில் அங்கத்துவம் பெற்ற அனைத்து அந்தண குருமார்களுக்கான அங்கத்துவ அடையாள அட்டைகள், எதிர்வரும் 25ஆம் 26ஆம் திகதிகளில் காலை 9 மணி தொடக்கம் குருகுல தலைமைக் காரியாலயத்தில் வழங்கப்பட இருப்பதால் தயவு செய்து சிரமம் பாராது வந்து பெற்றுக் கொள்ளவும்.

முத்திரை அளவு புகைப்படம் கொண்டு வருதல் வேண்டும்.

விரைவில் நடைபெற இருக்கும் வேத ஆகம பரீட்சைக்கான பதிவுகளையும் மேற்கொள்ளலாம். வருகை தரும்பொழுது 2009 அங்கத்துவத்தை உறுதிப்படுத்தும் வண்ணம் அன்புடன் வேண்டுகிறோம்.

-சர்வதேச இந்துமத
குருமார் ஒன்றியம்.

(2550)


# துப்பாக்கிச் சூட்டில் குடும்பப் பெண் பலி

(வடமராட்சி)

புதுமாத்தளன் பகுதியிலிருந்து பருத்தித்துறை நோக்கி நேற்று முன்தினம் திங்கட்கிழமை படகில் வந்த குடும்பப் பெண் ஒருவர் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

வல்வெட்டித்துறை ஊறணியைச் சேர்ந்த ஜெயச்சந்திரன் ஜெயவதனா (வயது 39) என்பவரே உயிரிழந்தவராவார். இவரது மரண விசாரணையை பருத்தித்துறைமுனை கடற்பகுதியில் வைத்து பருத்தித்துறை மாவட்ட நீதவான் க.அரியநாயகம் மேற்கொண்டார்.

பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட அதிகாரிக்கு நீதவான் உத்தரவிட்டார். (ச-10)

# புதுமாத்தளனில் காயமடைந்த 19 பேர் வைத்தியசாலையில்

(வடமராட்சி)

புதுமாத்தளனிலிருந்து பருத்தித்துறை நோக்கி கடந்த திங்கட்கிழமை படகில் வந்தவர்களில் காயமடைந்த 19 பேர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் இரு பெண்கள், இரு சிறுவர்கள் அடங்குகின்றனர். இவர்களில் ஒரு சிறுவன் உட்பட 6 பேர் யாழ்.போதனா வைத்தி சாலைக்கு மாற்றப்பட்டனர்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக தங்க வைக்கப்பட்டவர்களின் பெயர் விபரம் வருமாறு,

மு.அழகராஜா (வயது 48), பி.வசில்ராஜ் (வயது 27), ஆ.ஜெயரூபன் (வயது26), தி. உதயகுமார் (வயது28), செ.வசீகரன் (வயது 24), ஆ.விஜயலட்சுமி (வயது 38), ந.குயிலம்மா (வயது70) ஏனையவர்களின் பெயர் விபரங்கள் கிடைக்கப்பெறவில்லை. (ச-10)

# அமைதி வேண்டி பிரார்த்தனை


(யாழ்ப்பாணம்)

நாட்டில் அமைதியும் ஆனந்தமும் ஏற்பட வேண்டி அமைதிப் பிரார்த்தனை நிகழ்வு பகவான் சத்தியசாயி சேவா நிலையத்தினரால் நேற்று புதன்கிழமை முதல் நடத்தப்பட்டு வருகிறது.

இராமநாதன் வீதி, திருநெல்வேலியிலுள்ள பகவான் ஶ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் நடைபெற்று வரும் இப்பிரார்த்தனை நிகழ்வு தினமும் மாலை 4.30 மணி முதல் தொடர்ந்து ஏழு நாட்களிற்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பிரார்த்தனை நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ச-14)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களை உடனடியாக அரசு கைது செய்ய வேண்டும்

## விமல் வீரவன்ச ஆவேசம்



(கொழும்பு)

புலிககளின் மாவீரர்தின நிகழ்வுகளில் கலந்து கொண்டு இலங்கையின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக செயல்பட்ட மனோகணேசன் உட்பட தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் உறுப்பினர்களை உடனடியாக கைது செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

புலிகளுக்கு ஆதரவாக தென் பகுதிகளில் இருந்து கொண்டு செயல்பட்டவர்களையும் அமைப்புக்களையும் கைது செய்து சட்டத்தின் முன்நிறுத்தாவிடின் பயங்க ரவாதத்திற்கு எதிராக இலங்கை பெற்ற வெற்றி அர்த்தம் இல்லாது போய்விடும் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல்வீர வன்ச தெரிவித்தார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக (ஐ.சி.ஆர்.சி.) புலிகள் இயக்க தலைவர் பிரபாகரனையும் அவரது சிரேஷ்ட உறுப்பினர்களையும் பாதுகாப்பாக நாடு கடத்த சர்வ தேசத்தில் சதி இடம் பெற்று வருகின்றது. எனவே இது தொடர்பில் இராணுவ வீரர்களும் அரசாங்கமும் விழிப்புடன் செயல்பட வேண்டும் என்றும் கூறினார்.

தேசியசுதந்திர முன்னணியின் விசேட செய்தியாளர் மாநாடு நேற்று புதன்கிழமை பத்திரமுல்லையில் அமைந்துள்ள கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற போதே விமல் வீரவன்ச எம்.பி மேற்கண்டவாறு தெரிவித்தார். (ச-5)

## இன்று ஒரு தகவல்

# ஒரு பாடம்

அந்தக்காலத்தில் குருகுலவாசம் மேற்கொண்டு தான் படிக்க வேண்டும்.

ஆசிரியர் ஆச்சிரமத்தில் இருப்பார். அவருக்குத் தொண்டுகள் செய்ய வேண்டும். துணி துவைத்துப் போடவேண்டும். தூங்கும் போது காலைப் பிடித்து விடவேண்டும். புழுக்கமாக இருந்தால் விசிற வேண்டும்.

அப்படியே அவர் சொல்லிக் கொடுக்கும் பாடத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும். அவர் சொல்லிக் கொடுப்பதை ஓலைச் சுவடிகளில் எழுதிக் கொள்வார்கள்.

ஆக, குரு குல வாசம் என்பது மனதையும் அறிவையும் பண்படுத்தும் பயிற்சி.

பஞ்சபாண்டவர்கள் குருகுலத்தில் படிக்கப் போனார்களாம். ஏற்கனவே அங்கு 15 பேர் இருந்தார்களாம். இவர்களையும் சேர்த்து மொத்தம் 20 பேர்.

எல்லோரும் மிகவும் ஆர்வத்துடன் அங்கு படித்துக் கொண்டு இருந்தார்கள். இரண்டு ஆண்டுகள் ஓடி விட்டது.

எல்லோரும் ஊருக்குத் திரும்ப வேண்டிய நேரம். ஆசிரியர் ஒவ்வொருவரையும் கூப்பிட்டு "இதுவரைக்கும் என்ன கற்றுக் கொண்டாய்?" என்று கேட்டார்.

அங்கு படித்தவர்கள் அனைவருமே புத்திசாலிகள். அதனால் அவர்களிடம் அபாரமான கல்வியறிவை எதிர்பார்த்தார்.

ஒருத்தன் வந்து தான் எழுதி வைத்திருந்த சரித்திரப் பாடம் முழுவதையும் ஒப்பித்தான். இன்னொருவன் பூகோள பாடம் முழுவதையும் படித்துக் காண்பித்தான்.

இப்படி ஒவ்வொருவராக வந்து படித்துக் காண்பித்தார்கள். கடைசியாக தருமர் போனார். ஆசிரியர் இவரிடம் தான் அதிகமாக எதிர்பார்த்தார்.

ஆனால் அவர் பேசாமல் நின்றார்.

"நீ என்ன கற்றுக் கொண்டாய்? சொல்" என்று கேட்டார்.

தருமர் மெதுவாக, "ஐயா நான் கற்றுக் கொண்டது ஒன்றேயொன்று தான். அதுவே வாழ்க்கையில் எனக்கு மிகவும் முக்கிய பாடம்" என்றார்.

முனிவருக்கு ஒன்றும் புரியவில்லை. "தர்மா... நன்றாக யோசித்து சொல்... இரண்டு வருடமாக நீ கற்றுக் கொண்டது ஒன்றேயொன்று தானா?" என்றார் கோபமாக.

தருமரின் முகத்தில் எந்த மாறுதலும் இல்லை.

"இரண்டுவருடமாக நான் கற்றுக் கொண்ட பாடம் ஒன்றேயொன்று தான் எதையும் எடுத்துச் சொல்வதற்கு விரும்பவில்லை" என்றார் தருமர்.

முனிவருக்கு கோபம் வந்துவிட்டது. தருமரின் கன்னத் தில் ஓங்கியறைந்தார்.

தருமரின் கன்னம் சிவந்துவிட்டது. கண்கள் கலங்கி விட்டது. ஆனாலும் அவர் அமைதியை இழக்க வில்லை. தலை குனிந்து நின்றார்.

இவருடைய பிடிவாதம் முனிவருக்கு மேலும் ஆத்திரத்தை உண்டாக்கியது. இன்னொரு கன்னத்திலும் அறைந்து விட்டார். எல்லோரும் பயந்து போய் அமைதியாக இருந்தார்கள். முனிவர் கத்தினார்.

"அப்படி நீ கற்றுக்கொண்ட அந்த முக்கியமான பாடம் தான் என்ன? அதையாவது சொல்" என்றார்.

"ஐயா.: அதை மட்டும் ஒரு ஓலைச்சுவடியில் தனியாகக் குறித்து வைத்திருக்கிறேன், இந்தாங்க. நீங்களே படியுங்கள்" என்றார் தருமர்.

முனிவர் அதை வாங்கிப் படித்தார்.

"எப்படிப்பட்ட சோதனை ஏற்பட்டாலும், நிதானமிழுந்து கோபத்துக்கு ஆளாகக் கூடாது" என்று அதில் எழுதியிருந்தது"

அந்த ஒரு கன்னத்தில் முனிவரும் - எல்லா மாணவர்களும் தருமரைப் புரிந்துகொண்டார்கள். அவர் கற்றுக் கொண்டது ஏட்டுச் சுரைக்காய் அல்ல. வாழ்க்கையில் பயன் படக்கூடிய அனுபவப் பாடம்.

முனிவரின் கண்களில் ஆனந்தக் கண்ணீர். தருமரை அன்போடு கட்டித்தழுவினார்.

"தருமா, என்னை மன்னித்துவிடு. நீ மாணவனல்ல, ஆசிரியன். நான் இதுவரை தெரிந்த கொள்ளாத அனுபவப் பாடத்தை இப்பொழுது நீ எனக்கு கற்றுத் தந்தாய். நான் உனக்கு ஆசிரியன் என்று சொல்வதில் எனக்குத்தான் பெருமை" என்றார்.

நிதானம் தவறக்கூடாது என்பது நாம் எல்லோரும் கற்றுக் கொள்ள வேண்டிய ஒரு பாடம்.

ஆசிரியர் ஒருவர் மாணவனின் கன்னத்தில் அறைந்தார். இவன் நிதானம் தவறவில்லை.

"ஏன்?" என்று கேட்டார்கள். "நான் நிதானம் தவறியிருந்தால் வாத்தியார் இன் னொரு கன்னத்திலும் அல்லவா அறைந்திருப்பார்" என்றான் அவன்.

**தென்கச்சி கோ சுவாமிநாதன்**

# க.பொ.த. 2/த வகுப்புகளுக்கு மாணவர்களை அனுமதித்தல் தொடர்பாக திருத்தம் செய்யப்பட்ட சுற்று நிருபம்

(கொழும்பு)

க.பொ.த உயர்தர வகுப்புகளுக்கு மாணவர்களை அனுமதிப்பது தொடர்பாக 2008.03.07 ஆம் திகதி கல்வியமைச்சின் செயலாளரி னால் வெளியிடப்பட்ட 2008/17 இலக்க சுற்று நிருபத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளதாக வடக்கு மாகாணகல்விப்பணிப்பாளர் வீ. இராசையா சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் 2008/17 இலக்க சுற்று நிருபத்தின் பிரிவு 2.1 31.12.2008ஆம் திகதிய 2008/17 சுற்று நிருபத்தின் பிரகாரம் பின்வருமாறு திருத்தம் செய்யப்படல் வேண்டும்.

* பழைய பாடத் திட்டத்தின் பிரகாரம் க.பொ.த.சாதாரண தர பரீட்சையில் தாய் மொழி, கணிதம் உள்ளடங்கலாக கட்டாயப் பாடங்களில் 6 பாடங்கள் சித்தியடைந்திருக்க வேண்டும். அத்துடன் குறைந்த பட்சம் 3 பாடங்களில் திறமைச்சித்தி அல்லது அதற்கு மேற்பட்ட சித்திகளைப்பெற்றிருக்க வேண்டும். மேற்படி தகைமைகளைப் பூர்த்தி செய்வதற்கு மேலதிக பாடங்களில் பெறுகின்ற சித்திகளையோ அல்லது திறமைச்சித்திகளையோ உபயோகப் படுத்த முடியாது.

* 2007 இல் அறிமுகப்படுத்தப் பட்ட புதிய பாடத்திட்டத்தின் பிரகாரம் க.பொ.த. சாதாரணதர பரீட்சையில் தாய்மொழி, கணிதம் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தியடைந்திருக்கவேண்டும். அத்துடன் அதில் குறைந்த பட்சம் 3 பாடங்களில் திறமைச் சித்தி அல்லது அதற்கு மேற்பட்ட சித்திகளைப் பெற்றிருக்க வேண்டும்.

சுற்று நிருபத்தில் 2.5 (அ) 1 உப பிரிவு பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகிறது.

கலைப்பாடப்பரப்பின் 2.1, 2.2 உப பிரிவுகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் 3 திறமைச் சித்திகளில் ஒன்றேனும் க.பொ.த உயர்தர பரீட்சைக்கு தெரிவாகும் பாடங்களுக்கு ஏற்புடையதாக இருக்க வேண்டும்.

சித்திரம் அல்லது சங்கீதம் அல்லது நடனம் அல்லது நாட்டியம் மற்றும் அரங்கக்கலை ஆகிய பாடங்களில் ஏதேனுமொரு பாடத்தை மேற்படி பாடப்பரப்புக்குள் கற்க விரும்பும் மாணவர் க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் குறித்த பாடத்துக்கு திறமைச் சித்தியைப் பெற்றிருக்க வேண்டும்.

அழகியல் கல்வியில் இரண்டு பாடங்களை கற்பதாயின் அதில் ஒரு பாடத்தில் க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் திறமைச் சித்தியைப்

# படவரைஞர் சான்றிதழ் வழங்குவதற்கான பரீட்சை

(கொழும்பு)

நில அளவையாளர் நாயகத்தின் உத்தரவு பெற்ற பட வரைஞர் சான்றிதழ் வழங்குவதற்கான பரீட்சைகள் ஆள்கூற்றுக்கணிப்பு, படம் வரைதல் என. இரண்டு பகுதிகளாக நடத்தப்படவுள்ளது.

இதில் முதலாவது பரீட்சை ஜூன் மாதம் 20 ஆம் திகதியும் இரண்டாவது பரீட்சை ஓகஸ்ட் மாதம் 22 ஆம், 23 ஆம் திகதிகளிலும் நடைபெறும்.

சான்றிதழ் வழங்குவதற்கான தகுதியைப் பெறுவதற்கு பரீட்சார்த்திகள் ஒரே தடவையில் பகுதி I, பகுதி II ஆகிய இரு பரீட்சைகளி லும் சித்தியடைந்திருத்தல் வேண் டும்.

விண்ணப்பங்களை சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் (பரீட்சை), அளவையியல் படமாக்கல் நிறுவனம், தியத்தலாவ எனும் முகவரி க்கு மே மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும். (ஓ-6)



சாவகச்சேரி தென்னிந்திய திருச்சபையின் பங்குத்தந்தையாக நீண்ட காலம் பணியாற்றி பதவியுயர்வுடன் செல்லும் வண. P.H. வசந்தகுமார் தம்பதிகளை சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகற் பராமரிப்பு நிலைய ஸ்தாபகர் சி. மகாலிங்கம் தம்பதிகள் கௌரவிப்பதனையும், நிலைய நிர்வாக சபைத் தலைவர் வை. இராசரத்தினம் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம் : சாவகச்சேரி நிருபர்)

## இராசி பலன்

23.04.2009
(சித்திரை 10, வியாழக்கிழமை)
திரயோதசி முற்பகல் 11.18 மணிவரை
உத்தரட்டாதி பிற்பகல் 1.48 மணிவரை
இராகுகாலம் 1.30-3.00 மணிவரை
சுபநேரம் 7.30-9.00 மணிவரை
ஏழாலை பெரியதம்பிரான் தேர்

| | |
|---|---|
| மேடம் | மனச்சஞ்சலம், வேலைச்சுமை, மனஸ்தாபம், முயற்சி தாமதம். |
| இடபம் | குடும்ப மகிழ்ச்சி, காரிய நன்மை, தொழில் வருமானம், நண்பர்கள் வருகை. |
| மிதுனம் | ஆரோக்கியம், தொழிலில் ஆர்வம், பிறர் உதவி, முயற்சி கைகூடும். |
| கடகம் | ஆரோக்கியக் குறைவு, குடும்பக் கவலை, பிரயாணம், கட்டுப்பாடு. |
| சிங்கம் | மனக்கவலை, வீண்பகை, காரிய தடங்கல், உடல் நலக் குறைவு. |
| கன்னி | கீர்த்தி, முயற்சி கைகூடும், தேக நலன், பண வருவாய். |
| துலாம் | தொழில் நன்மை, மனமகிழ்ச்சி, முயற்சி பலிதம், தேகநலன். |
| விருச்சிகம் | வியாபார நன்மை, பூர்வ புண்ணிய கருமம், கௌரவக் குறைவு, காரிய தாமதம். |
| தனுசு | தன்னம்பிக்கைக்குறைவு, நல்ல முயற்சி, வாக்கு மேன்மை, சுப செலவு. |
| மகரம் | மாதர் நட்பு, பிரயாண நன்மை, முயற்சி கைகூடும், தனலாபம். |
| கும்பம் | மனோ சங்கடம், அதிக செலவு, காரிய தாமதம், உடல் நலக் குறைவு. |
| மீனம் | சயன சுகம், நல்ல முயற்சி, கௌரவமான நிலை, வெகுமானம். |

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் 1 Kg | திருநெல்வேலி ரூபா | யாழ்ப்பாணம் ரூபா |
|---|---|---|
| கத்தரிக்காய் | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 |
| பச்சைமிளகாய் | 30 | 50 |
| தக்காளி | 80-120 | 140 |
| அவரை | - | - |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 70 |
| கோவா | 10 | 20 |
| கரட் | 30 | 30 |
| பூசணி | 15 | 30 |
| புடோல் | 40 | 50 |
| வாழைக்காய் | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 25 | 30 |
| பெரிய வெங்காயம் | 120 | 120 |
| பாகற்காய் | 80 | 90 |
| வெண்டிக்காய் | 40-50 | 50 |
| கரணைக் கிழங்கு | 40 | 40 |
| பயிற்றங்காய் | 40 | 50 |
| லீக்ஸ் | 160 | 140 |
| போஞ்சி | - | - |
| கீரை - 1 பிடி | 15 | 30 |
| தேசிக்காய் | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 |

### நெதர்லாந்தில்

# உண்ணா விரதமிருந்த தாய்மார்களுடன் வெளிநாட்டமைச்சினர் சந்திப்பு



இலங்கையில் உடன் போர் நிறுத்தத்தை வலியுறுத்தி நெதர்லாந்து நாடாளுமன்றம் முன்பாக 12 ஆவது நாளாக உண்ணா நிலைப் போராட்டத்தில் ஈடுபட்ட இரு தாய்மார்களையும் நெதர்லாந்து வெளிநாட்டமைச்சின் பல கட்சி உறுப்பினர்களையும் கொண்ட ஆலோசனைக் குழுவினர்கள் நாடாளுமன்ற வளாகத்தில் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

இச் சந்திப்பின் போது தாங்கள் தமிழ் மக்களின் தற்போதைய நிலைமை தொடர்பாக மிகவும் அக்கறையுடன் இருப்பதாகவும் இன்று வியாழக்கிழமை இதுபற்றி நாடாளுமன்றத்தில் கலந்துரையாடி முடிவெடுக்க விருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

இக்குழுவினர் இவ்விரு உண்ணா விரதிகளையும் சந்தித்து கலந்துரையாடியதற்கு மதிப்புக் கொடுத்து இவ்உண்ணா நிலைப் போராட்டம் 12 ஆவது நாளான நேற்று மாலை 5.30 மணிக்கு குளிர்பானம் கொடுத்து நிறைவு செய்யப்பட்டது.

நாடாளுமன்றத்தின் முன்றலில் பல நூற்றுக்கணக்கான தமிழ்மக்கள் ஒன்று திரண்டு கவனயீர்ப்புப் போராட்டத்தினை நேற்றுக் காலை 10 மணியிலிருந்து மாலை 6 மணிவரை நடாத்தியிருந்தனர்.

இதேபோல் தொடர்ந்தும் கவனயீர்ப்புப் போராடம் நாடா ளுமன்ற முன்றலில் காலை 10 மணியிலிருந்து ஒவ்வொருநாளும் முன்னெடுக்கப் படவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)

# பாதுகாப்பு வலயத்தில் படையினர் சிறு ஆயுதங்களையே பயன்படுத்துகின்றனராம்

## பிரிகேடியர் உதயநாணயக்கார தகவல்

(கொழும்பு)

பாதுகாப்பு வலயத்தில் முன்னேறிவரும் படையினர் மீது புலிகள் கனரக ஆயுதங்களைக் கொண்டு தாக்குதல் நடத்துகின்ற போதும் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு படையினர் சிறு ஆயுதங்கள் மூலமே பதில் தாக்குதல் நடத்தி வருகின்றனர் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

நாட்டின் பாதுகாப்பு நிலைமை தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று காலை தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் நடைபெற்ற போதே அவர் இவ்வாறு கூறினார். இங்கு பிரிகேடியர் மேலும் கூறியதாவது,

பாதுகாப்பு வலயத்தில் புலிகளின் பிடியிலுள்ள பொதுமக்களை மீட்பதற்கான படை நடவடிக்கை நன்கு திட்டமிட்டு மிகவும் நுட்பத்துடன் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

கடந்த இரண்டரை நாட்களில் மொத்தம் 81 ஆயிரத்து 420 பொதுமக்களை படையினர் மீட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் புலிகளுடன் படையினர் நடத்திய நேரடித் தாக்குதலில் வாகனமொன்றும் புலித் தலைவர்கள் இருவரின் சடலங்களும் மீட்கப்பட்டன.

புதுமாத்தளன் பிரதேசத்திலுள்ள ஆஸ்பத்திரியை கைப்பற்றி படையினர் அங்கு சிகிச்சை பெற்றுவந்த 80 முதியவர்களை மீட்டு வேறு ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பியுள்ளனர் என்றார். (ஓ-6)

# இலங்கை அரசின் போர் நடவடிக்கைகளுக்கு முழுமையான ஆதரவு வழங்குவதாக சீனா அறிவிப்பு

(சீனா)

விடுதலைப் புலிகள் மீது இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வரும் படை நடவடிக்கையை சீனா முழுமையாக ஆதரிக்கின்றது என சீனாவின் வெளியுறவுத் துறை பேச்சாளர் ஜியாங் யூ தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் சரணடைவதற்கு இலங்கை அரசாங்கம் 24 மணிநேர அவகாசம் கொடுத்துள்ளது பற்றி கேட்கப்பட்ட போது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நேபாளமும், இலங்கையும் சீனாவின் நண்பர்கள், அந்த அரசுகளின் பாதுகாப்பிற்கு நாம் ஆதரவுகளை வழங்குவதுடன். அவற்றின் தேசிய ஒருமைப்பாட்டையும் நாம் பாதுகாப்போம்.

இந்த இரு நாடுகளினதும் அரசியல் உறுதித் தன்மையை பேணுவது சீனாவின் கடமை. இலங்கை அரசு விடுதலைப்புலிகள் மீது மேற்கொண்டு வரும் படை நடவடிக்கையை சீனா முழுமையாக ஆதரிக்கின்றது. இலங்கை அரசு மேற்கொண்டுவரும் முயற்சிகளுக்கும் சீனா ஆதரவுகளை வழங்கும் என்றார் அவர். (ஓ- 6)

# வன்னியில் இடம்பெற்றுவரும் யுத்தம் குறித்த உண்மைத்தகவல்களை அறிந்துகொள்வதில் சிக்கல்

## பி.பி.சி. உலக சேவை தகவல்

இலங்கையின் வன்னிப் பகுதியில் இடம்பெற்று வரும் யுத்தம் குறித்த உண்மைத் தகவல்களை அறிந்து கொள்வதில் பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் காணப்படுவதாக பி.பி. சி உலக சேவை தகவல் வெளியிட்டுள்ளது.

பக்கச் சார்பற்ற உண்மையான செய்திகளை அறிந்து கொள்வதில் சிக்கல்கள் காணப்படுவதாகவும் அது சுட்டிக்காட்டியுள்ளது.

ஆயுத போராட்ட முனைப்புக்களைப் போன்றே பிரச்சார போராட்டங்களும் முனைப்பு பெற்றுள்ள்தாகவும் சுதந்திர ஊடகவியலாளர்களுக்கு இலங்கையின் வட பகுதியில் செய்திகளை சேகரிக்க அனுமதியளிக்கப்படுவதில்லை என்று குறிப்பிடப்படுகிறது.

சுற்றுலாப் பயணிகளைப் போன்று இலங்கைக்குள் பிரவேசிக்க முயற்சி மேற்கொள்ளும் ஊடக்வியலாளர்கள் திருப்பி அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

வடபகுதிக்கு செய்தி சேகரிக்கச் செல்லும் சுதந்திர ஊடகவியலாளர்கள் சோதனைச் சாவடிகளிலேயே திருப்பி அனுப்பப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள அதேவேளை இலங்கையின் ஊடக சுதந்திரம் ஓர் இரும்புக் கரத்தினால் தடுக்கப்பட்டு வருவதாக சுட்டிக் காட்டியுள்ளது.

உள்நாட்டு ,வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் சுதந்திரமான முறையில் செய்திகளை சேகரிப்பதற்கு பல்வேறு வழிகளில் தடை ஏற்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)

## செயலமர்வு

வடமராட்சி வலயப் பாடசாலைகளில் தரம் 11 இல் தகவல் தொழில்நுட்ப பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் நான்கு நாட்களுக்கு கணனி வள நிலையத்தில் நடைபெறவுள்ளது. குறித்த பாடத்தினைக் கற்பிக்கும் ஆசிரியர்களைத் தவறாது பங்குபற்றுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை அடைக்கலந்தோட்டம் ஸ்ரீ கந்தசுவாமி கோயிலின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 29 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இம் மகோற்சவத்தில் மே மாதம் 6ஆம் திகதி புதன்கிழமை சப்பரமும், 7 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இரதோற்சவமும், 8 ஆம் திகதி வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது. (ஓ-4)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

அராலி மத்தி அருள்மிகு உலோலை சிட்டி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 29 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இம் மஹோற்சவத்தில் மே மாதம் 6 ஆம் திகதி புதன்கிழமை மாலை 5 மணிக்கு சப்பறமும் 7 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு இரதோற்சவமும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது. (ஓ-4)

## இலக்கிய விழா

வலிகாமம் தெற்கு பிரதேச சபை உலக புத்தக தினத்தை முன்னிட்டு சுன்னாகம் பொது நூலகத்தில் இன்று காலை 10 மணிக்கு பிரதேசசபைச் செயலாளர் திருமதி. ச. சொக்கலிங்கம் தலைமையில் இலக்கிய விழாவை நடத்த உள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் .வைத்தீஸ்வராக்கல்லூரி இளைப்பாறிய அதிபர் சிற்பி சிவசரவணபவன் கலந்து கொள்ளவுள்ளார். (ஓ)

## போட்டிகள் பிற்போடப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையினால் உலக புத்தக தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே இன்று வியாழக் கிழமை கொக்குவில் பொது நூலகத்தில் நடத்தப்பட இருந்த கவியரங்கம், பட்டிமன்றம், பேச்சுப் போட்டி என்பன பிற்போடப் பட்டுள்ளது.

போட்டி நடைபெறும் திகதி பத்திரிகை வாயிலாக வெளியிடப்படும் என நல்லூர் பிரதேச சபை செயலாளர் மேரி ஜோசப் சாந்தசீலன் தெரிவித்துள்ளார். (ஓ-7)

## முன்பள்ளி சிறார்களுக்கான பால் விநியோகம் ஆரம்பம்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட முன் பள்ளிச் சிறார்களுக்கான பால் விநியோகம் இன்று வியாழக் கிழமையில் இருந்து வழங்கப்பட உள்ளது. இதற்குத் தேவையான பாலை பின்வரும் இணைப்பு நிலையங்களில் இருந்து முன்பள்ளிகள் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சாவகச்சேரி கால்நடை வளர்ப்போர் சங்கம், கச்சாய் அ.த.க. பாடசாலைலக்கு அண்மைய நிலையம், கைதடி பால் நிலையம், நாவற்குழி தச்சன்தோப்பு சந்திக்கு அண்மித்த நிலையம், மட்டுவில் கமலாசினிக்கு முன் உள்ள நிலையம்.

முன்பள்ளிகள் தாம் முன்பு கொள்வனவு செய்த நிலையங்களில் இருந்து பாலைக்கொள்வனவு செய்யலாம் என்றும் முதலாவது நிலையம் தவிர்ந்த மற்றைய நிலையங்கள் இவ் வாரம் இயங்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கப் பொது முகாமையாளர் தா.பாலசுந்தரம் அறிவித்துள்ளார். (ஓ-29)


## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

பிறப்பு 25 02 1924 | இறப்பு 25 03 2009



அமரர் வேலுப்பிள்ளை இராசரத்தினம் (சிவானந்தம்)

(ஒய்வுபெற்ற ஆசிரியர்)

கடந்த 25.03.2009 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்ப விளக்கு அமரர் வேலுப்பிள்ளை இராசரத்தினம் அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் நாளை 24.04.2009 (வெள்ளிக்கிழமை) காலை 5.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

15 ஆம் கட்டையடி
உடுப்பிட்டி.

குடும்பத்தினர்

(2445/இ-11)

# உயிர் போனாலும் பரவாயில்லை ; போர்நிறுத்தம் ஏற்படும் வரை எங்களின் போராட்டம் தொடரும்

## சென்னையில் உண்ணாவிரதமிருக்கும் பெண்கள்

(சென்னை)

இலங்கையில் அப்பாவித் தமிழர்களைக் காப்பாற்ற வேண்டும், உடனடியாகப் போர் நிறுத்தம் செய்ய மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி சென்னையில் பெண்கள் அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் நடத்திவரும் உண்ணாநிலைப் போராட்டம் 9 ஆவது நாளாக நேற்று முன்தினம் தொடர்ந்தது.

நடிகர்கள் வழக்கறிஞர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் நேற்று முன்தினம் அப்பெண்களைச் சந்தித்து தங்களின் ஆதரவை தெரிவித்தனர்.




இலங்கைத் தமிழர்களுக்காகத் தீக்குளித்த தியாகி முத்துக்குமாரின் இல்லம் அமைந்துள்ள கொளத்தூரில் கடந்த 13 ஆம் திகதி தமிழ் அமைப்புக்களைச் சேர்ந்த பெண்கள் உண்ணாநிலைப் போராட்டம் தொடங்கினர்.


இலங்கையில் உடனடியாகப் போரை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி அவர்கள் தொடர் உண்ணாநிலைப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அங்கு உண்ணாநிலை இருக்கக் காவல் துறையினர் அனுமதி மறுத்ததால் அவர்கள் எழும்பூரில் உள்ள வைகோவின் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமை அலுவல கமான 'தாயகம்' வளாகத்தில் உண்ணா நிலை இருக்கத் தொடங்கினர்.

நேற்று முன்தினம் 9 ஆவது நாளாக உண்ணாநிலைப் போராட்டம் தொடர்ந்து நடைபெற்றது. உண்ணாநிலை இருந்து வரும் பெண்களில் பலரும் உடற் சோர்வு ஏற்பட்டு படுத்தபடியே கிடந்தனர். உயிர் போனாலும் பரவாயில்லை. உண்ணாநிலையைக் கைவிட மாட்டோம் என்று அவர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

போர் நிறுத்தம் ஒன்றே தான் தங்களின் குறிக்கோள் என்றும் அவர்கள் திட்ட வட்டமாகத் தெரிவித்துள்ளனர். ஏற்கனவே தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி உள்ளிட்டோர் கடந்த திங்கட்கிழமை இந்தப் பெண்களைச் சந்தித்து உண்ணாநிலைப் போராட்டத்தைக் கைவிடக் கோரியும் அவர்கள் அதற்குச் செவிசாய்க்கவில்லை.

இந் நிலையில் உண்ணாநிலை இருந்து வரும் பெண்களை நேற்று முன்தினம் நடிகர் விவேக் சந்தித்துப் பேசி னார்.

அவர்களின் போராட்டத்திற்கு அவர் ஆதரவு தெரிவித்தார். இதுபோன்று வழக்கறிஞர்களும் உண்ணா நிலைப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.




சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞர் சங்கத் தலைவர் போல் கனகராஜ், தமிழ்நாடு, வழக்கறிஞர் சங்கத் தலைவர் பிரபாகரன் உட்பட ஏராளமான வழக்கறிஞர்கள் நேற்று முன்தினம் பிற்பகலில் தாயகத்திற்கு வந்து உண்ணாநிலை இருந்த பெண்களைச் சந்தித்து உரை யாடினர்.

இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்படுத்த வலியுறுத்தி நடைபெறும் உண்ணாநிலைப் போராட்டத்திற்கு ஆதரவு அளிப்பதாக அவர்கள் அப்போது தெரிவி[illegible]த்தனர்.

இந்த உண்ணா நிலைப் போரா[illegible]ட்டத்தில் கலந்து கொண்டுள்ள பெண் ஒருவர் கூ[illegible] யில், இலங்கையில் எங்களின் சகோதரிக[illegible] சகோதரர்கள் ஈவு இரக்க[illegible]மின்றிக் கொல்லப்படுகின்றனர். இதைத் தடுக்க யாரும் இல்லையா? எத்தனை உயிர்களை நாங்கள் காவு கொடுப்பது? என்று கண்கலங்க கூறினார்.

நிர்க்கதியாக தவிக்கும் அப்பாவித் தமிழ் மக்களைக் காப்பாற்ற கடவுள் கூட வரமாட்டாரா? ஏதுமறியாத பிஞ்சுக் குழந்தைகளைக் கூட விட்டு வைக்காமல் கொலை செய்யும் சிங்கள வெறியர்களைக் கடவுள் கூட கண்டிக்க மாட்டாரா? என்று கண் கலங்கினார்.

போர் நிறுத்தமும் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை நிறைவேறும் வரை எங்களின் உண்ணாநிலைப் போராட்டம் தொடரும். உயிர் போனாலும் பரவாயில்லை போர் நிறுத்தம் ஏற்படும் வரை எங்களின் போராட்டம் தொடரும் என்று உண்ணா நிலைப் போராட்த்தை நடத்திவரும் பேராசிரியை சரஸ்வதி கூறினார். (ஓ-6)

## பாரதச் செய்திகள்

## இலங்கையில் போரை நிறுத்தக்கோரி — இன்று வேலை நிறுத்தம் —

### கருணாநிதி அறிவிப்பு



(சென்னை)

இலங்கையில் போர் நிறுத்தத்திற் கான நடவடிக்கை களை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துவதற்காக இன்று வேலை நிறுத்தம் நடக்கும் என முதல் வர் கருணாநிதி அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில், இலங்கை அரசுக்கு கண்டனத்தை தெரிவிக்கவும், அவர் இறந்து கொண்டிருக்கும் தமிழர்களைக் காப்பாற்ற மத்திய அரசு ஒரு நொடியும் தாமதிக்காமல், இலங்கையில் போர் நிறுத்தத்திற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இதைக் கேட்டுக் கொள்வதற்காக, தி.மு.க., உள்ளிட்ட அனைத்து கட்சிகளும் கட்சி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட நிலையில் தமிழக மக்கள் அனைவரும் அவர்களாகவே முன் வந்து இன்று வியாழக்கிழமை காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை நடக்கும் அமைதியான பொது வேலை நிறுத்தத்தில் ஈடுபட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

இது இலங்கை அரசுக்கான கண்டனம் மட்டும் அல்ல ; இலங்கையில் செத்துக் கொண்டிருக்கும் தமிழ் இனத்துக்காக விடும் கண்ணீரும் கூட என்ற உணர்வோடு இந்த வேலை நிறுத்தத்தில் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். இவ்வாறு கருணாநிதி அறிக்கையில் கூறியுள்ளார். (ஓ-6)

## இலங்கை தமிழரைக்காக்க ஒட்டு மொத்தமாக குரல் கொடுப்போம்

### இராமதாஸ் வேண்டுகோள்

(சென்னை)

இலங்கை தமிழர்களை காப்பாற்றுவதற்கு ஒட்டுமொத்த தமிழர்களும் குரல் கொடுக்க முன்வர வேண்டும் என பா.ம.க., நிறுவுனர் இராமதாஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

வன்னிப் பகுதியில் இரத்த ஆறு ஓடுவதைத் தடுத்து நிறுத்துவதற்கு இன்னும் ஒரு சில மணி நேரம் மட்டுமே உள்ளது என்று மனித உரிமைகள் காப்பகம் எச்சரித்திருக்கிறது. இலங்கையில் மிகப் பெரும் தமிழின அழிப்புக்கு இலங்கை அரசு திட்டம் தீட்டி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த எச்சரிக்கை புலப்படுத்துகிறது. போர் நிறுத்தம் பற்றி இலங்கையிடம் இதுவரை இந்திய அரசு வாய் திறக்கவில்லை. போர் நிறுத்தம் என சொல்லப் போவதில்லை என்றும் காங்கிரஸ் மேலிடப் பேச்சாளர் பகிரங்கமாகவே அறிவித்திருக்கிறார்.

கந்தகப் புகைக்குள்ளும் எறிதணலிலும் நமது உறவுகள் உயிரைக் கையில் பிடித்தபடி காத்துக்கொண்டிருக்கின்றனர். தமிழக மக்களால் மட்டுமே இந்தப் பேரழிவைத் தடுத்து நிறுத்த முடியும். இதற்காக ஒட்டுமொத்த தமிழர்களும் குரல் கொடுக்க முன்வரவேண்டும். இந்த நிமிடம் தவறினால் இனி தமிழினத்தை காக்க முடியாமலேயே போய்விடும் இவ்வாறு இராமதாஸ் கூறியுள்ளார். (ஓ-6)

## இலங்கைத்தமிழர் படுகொலையை கண்டித்து சேலம் சட்டக்கல்லூரி மாணவர்களின் — திடீர் போராட்டத்தால் பரபரப்பு —

(சென்னை)

இலங்கையில் விடுதலைப் புலிகளை அழிப்பதாகக் கூறி இலங்கை இராணுவம் அப்பாவி தமிழர்கள் மீது குண்டு வீசி தாக்குதல் நடத்துவதை கண்டித்து சேலத்தில் சட்டக்கல்லூரி மாணவர்கள் நேற்று முன்தினம் திடீர் போராட்டத்தில் குதித்தனர்.

வழக்கம் போல் கல்லூரிக்கு வந்த சட்டக் கல்லூரி மாணவர்களில் ஒரு பிரிவினர் வகுப்புகளுக்கு செல்லாமல் புறக்கணித்தனர். பின்னர் அவர்கள் கல்லூரி முன்பு திரண்டு ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

அங்கு காங்கிரஸ் கட்சியின் அகில இந்திய தலைவி சோனியா காந்தியின் உருவ பொம்மையை தீயிட்டு கொளுத்தினார்கள். பின்னர் அவர்கள் அங்கிருந்து ஊர்வலமாக ஏற்காடு பிரதான வீதிக்கு வந்து அங்கு நடு வீதியில் மறியலிலும் ஈடுபட்டனர். இதனால் அந்த வழியாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

வீதி மறியலில் ஈடுபட்ட போது அந்த வழியே ஏற்காடு அடிவாரம் பகுதியில் இருந்து சேலம் பழைய பஸ் நிலையத்துக்கு வந்த பஸ்ஸை மாணவர்கள் வழிமறித்து தடுத்து நிறுத்தினார்கள்.

நிலைமையை உணர்ந்த பஸ் பயணிகள், பயத்துடன் அலறியடித்த படியே பஸ்சில் இருந்து இறங்கினார்கள்.

அப்போது சில மாணவர்கள் பஸ் மீது கல் வீசித் தாக்கினார்கள். அதில் பஸ்ஸின் முன் பக்க, பின்பக்க மற்றும் பக்கவாட்டு ஜன்னல் கண்ணாடிகள் உடைந்தன. இதனால் அந்த பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இந்த சம்பவத்தில் பயணிகள் யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

இந்த சமயம் தொடர்பாக 9 பேரை பொலிஸார் கைது செய்து கன்னங்குறிச்சி பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றனர். அவர்கள் மீது சோனியா காந்தி உருவ பொம்மையை எரித்தது தொடர்பாக ஒரு வழக்கும். வீதி மறியல் மற்றும் அரசு பஸ்ஸை கல்வீசி தாக்கி சேதப்படுத்தியது தொடர்பாக ஒரு வழக்கும் என இரு வழக்குகள் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடத்தப்பட்டது.

இதுபற்றி தகவல் கிடைத்ததும் 50க்கும் மேற்பட்ட மாணவர்கள் வகுப்புகளுக்கு செல்லாமல் புறக்கணித்துவிட்டு, கன்னங்குறிச்சி பொலிஸ் நிலையத்துக்கு சென்று பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

பின்னர் கைது செய்யப்பட்ட 9 மாணவர்களும் நேற்று முன்தினம் மாலை சேலம் 4 ஆவது ஜுடீசில் நீதிவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

நீதிவான் முனுசாமி விசாரணை நடத்தி, மாணவர்கள் 9 பேரையும் 15 நாள் காவலில் வைக்க உத்தரவிட்டார். அதைத் தொடர்ந்து அவர்கள் சேலம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர். (ஓ 6)

# நவம்பர் மாதம் 19 ஆம் திகதிக்கு பின்னர் ஜனாதிபதித் தேர்தல்

## அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா



(கொழும்பு) எதிர்வரும் நவம்பர் மாதம் 19 ஆம் திகதிக்குப் பின்னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருகின்றது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலை நடத்தத் தயாராக இருக்கின்றார். எனவே அரசாங்கம் தேர்தல்களை பகுதி பகுதியாக நடத்துகின்றது என்று விமர்சிப்பதை விடுத்து ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதித் தேர்தலுக்கு தயாராக வேண்டும் என்று ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

ஊடகத்துறை அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர்மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறுகையில்,

அரசாங்கம் தேர்தல்களை பகுதி பகுதியாக நடத்துகின்றது என்று எதிர்கட்சி தொடர்ந்து குற்றம் சுமத்தி வருகின்றது. எனவே, அரசாங்கம் தீர்மானம் ஒன்றை எடுத்துள்ளது. அதாவது எதிர்வரும் நவம்பர் மாதத்துக்குப் பின்னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்த ஜனாதிபதியினால் முடியும்.

அந்தவகையில் எதிர்வரும் நவம்பர் 19 ஆம் திகதிக்குப் பின்னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்பார்க்கின்றார். எனவே ஐக்கிய தேசியக் கட்சி இனி ஜனாதிபதித் தேர்தலுக்கு தயாராகலாம். அதில் எம்முடன் போட்டியிடலாம்.

நாட்டில் இடம்பெறுகின்ற மிகப் பெரிய தேர்தலுக்கு செல்வதற்கே அரசாங்கம் தயாராகிவிட்டது. எனவே அரசாங்கத்தை வெறுமனே எதிர்ப்பதை விடுத்து ஐக்கிய தேசிய கட்சியை ஜனாதிபதித் தேர்தலுக்கு தயாராகுமாறு கோரிக்கை விடுக்கின்றோம்.

பாதுகாப்புக் காரணங்களுக்காகவே மாகாண சபைத் தேர்தலை அரசாங்கம் பகுதி பகுதியாக நடத்துகின்றது. (ஓ-6)

# வவுனியா மருத்துவமனையில் 21 பேர் உயிரிழப்பு

முல்லைத்தீவு மாவட்டப் பாதுகாப்பு வலயப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை படையினர் மேற்கொண்ட தாக்குதலில் படுகாயமடைந்து வவுனியா மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டவர்களில் 21 பேர் சிகிச்சை பலனளிக்காத நிலையில் உயிரிழந்துள்ளனர். இவர்களின் உடலங்கள் வவுனியா மருத்துவமனை சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

திங்கட்கிழமையும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமையும் படுகாயமடைந்த 316 பேர் தரைவழியாக வவுனியா மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டனர்.

இலங்கை இராணுவத்தினரே இவர்களைக் கொண்டு வந்து வவுனியா மருத்துவமனை யில் அனுமதித்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவர்களிலேயே 21 பேர் உயிரிழந்துள்ளனர். (ஓ-6)

# மரணமடைந்த படையினரின் எண்ணிக்கையை பாதுகாப்பு காரணங்களுக்காக வழங்க முடியாது

## சபையில் அமைச்சர் தினேஷ் பதில்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு யுத்த நடவடிக்கைகளின் போது மரணமடைந்த படையினரின் எண்ணிக்கைகளை பாதுகாப்பு காரணங்களுக்காக வழங்க முடியாது என்று ஆளுங் கட்சியின் பிரதம கொறடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

பாராளுமன்றில் ஐ.தே.க. எம்.பி.க்களினால் கேட்கப்பட்டிருந்த கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒழுங்குப் பத்திரத்தின் பிரகாரம் பாராளுமன்ற உறுப்பினரான ரஞ்சித் அலுவிஹார பிரதம உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரிடம் 2008 ஜனவரி மாதம் நடைபெற்ற அவசரகால சட்ட விவாதத்தின் போது சமர்பிக்கப்பட்ட அறிக் கையின் பிரகாரம் வடக்கு, கிழக்கு யுத்த நடவடிக்கைகளின் போது குறித்த காலப் பகுதியில் ஒவ்வொருநாளும் மரணமடைந்த தரைப் படையினர், கடற்படையினர், விமானப்படையினர் மற்றும் பொலிஸாரின் எண்ணிக்கை எவ்வளவு என்றும் கேட்டிருந்தார்.

வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரத்தின் போது பதிலளித்துக் கொண்டிருந்த அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, பாதுகாப்புக் காரணங்களுக்காக மரணமடைந்த படையினரின் எண்ணிக்கையை வழங்கமுடியாது என்றார். (ஓ-6)

# புலிகளின் செயற்பாடுகளை கண்காணிக்க பாலித ஹோகன மலேசியா விஜயம்

விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் குறித்து கண்காணிக்கும் நோக்கில் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித கோஹன மலேசியாவிற்கு விஜயம் செய்துள்ளார்.

மலேசியாவில் விடுதலைப் புலி செயற்பாடுகள் உயர்வடைந்து செல்வதாக கிடைக்கப் பெற்ற புலனாய்வுத் தகவல்களை அடுத்து கோஹன அங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் ஆயுத கொடுக்கல் வாங்கல் தென்கிழக்காசிய நாடுகளை மையப்படுத்தி நடத்தப்பட்டு வருவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மேலும் இறுதிக் கட்ட போராட்டங்களின் போது விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மலேசியாவில் தஞ்சமடையக் கூடும் என தகவல்கள் வெளியாகியுள்ளதாகவும் விடுதலைப் புலிகள் மலேசியாவில் ஊடுருவுவதனை தடுக்கும் நோக்கில் பாலித்த கோஹன அந்நாட்டு அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)

# இறுதிக் கட்ட போராட்டத்தின் போது அதிகளவான பொதுமக்கள் உயிரிழக்கலாம்

## அனைத்துலக மன்னிப்புச் சபை தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தம் காரணமாக அதிக எண்ணிக்கையிலான பொதுமக்கள் உயிரிழப்பதாக அனைத்துலக மன்னிப்புச் சபை தகவல் வெளியிட்டுள்ளது. அண்மைய மோதல்களின் போது சுமார் 4 ஆயிரத்து 500 அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாக அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

பொதுமக்கள் உயிரிழப்புக்களை தவிர்க்கும் வகையில் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள தரப்பினர் செயற்பட வேண்டியது மிகவும் அவசியமானதென அவ் அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்புடனான இறுதிக் கட்ட போராட்டத்தின் போது அதிக எண்ணிக்கையிலான பொதுமக்கள் உயிரிழக்கக் கூடும் என அனைத்துலக மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் உடனடி போர் நிறுத்தமொன்று குறித்து கவனம் செலுத்த வேண்டும் என அனைத்துலக மன்னிப்புச் சபையின் இலங்கை ஆய்வாளர் யொல்னா பொஸ்டர் குறிப்பிட்டுள்ளார்.

இரு தரப்பினரும் சர்வதேச யுத்த சட்டங்களுக்கு மதிப்பளித்து செயற்பட வேண்டியது அவசியம் என அவர் தெரிவித்துள்ளார். (ஓ-6)


BOC ලංකා බැංකුව இலங்கை வங்கி

**மீட்கப்படாத தங்க அடகுநகைகளின் ஏல விற்பனை அறிவித்தல்**

சுன்னாகம் இலங்கை வங்கியில் 10.07.2008க்கு முன்னர் 06 மாதங்களுக்கும், 10.01.2008 க்கு முன்னர் 12 மாதங்களுக்கும் அடகுவைத்து இதுவரை மீட்கப்படாத அல்லது வட்டி செலுத்தப்பட்டு புதுப்பிக்கப்படாத அடகு நகைகள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

*ஏலவிற்பனைத் திகதி* – 26.04.2009 (ஞாயிற்றுக்கிழமை) காலை 8.30 மணி

*ஏலவிற்பனை நடைபெறும் இடம்* – சுன்னாகம் மேற்தரக் கிளை காங்கேசன்துறை வீதி சுன்னாகம்.

ஏல விற்பனையை இரத்துச்செய்யும்/ ஒத்திவைக்கும் உரிமை வங்கிக்கு உண்டு.

உதவிப் பொதுமுகாமையாளர்
இலங்கை வங்கி
வடமாகாணக் காரியாலயம்
யாழ்ப்பாணம்.

(C-2396)



# அரசாங்க அறிவித்தல்

மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்

"2009 ஆம் ஆண்டுக்கான வழங்கலுக்கான கூறுவிலைகள் கோருதல்

மாவட்ட செயலக, பிரதேச செயலகங்களின் பாவனைக்காக கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் பொருட்களுக்கான கூறுவிலைகள் பொருத்தமான வழங்குநர்களிடமிருந்து கோரப்படுகின்றன. கேள்விதாரர்கள் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 100.00உம் மீளளிக்கக் கூடிய வைப்புப் பணமாக ரூபா 5000.00 உம் செலுத்துதல் வேண்டும். இச் செயலகத்தால் வழங்கப்படும் மாதிரிப்படிவத்தில் கேட்டுக்கொண்ட விபரங்களுக்கேற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்ப படிவங்களை தலைவர், மாவட்ட செயலக பெறுகைக் குழு; மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியிட்டு, கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "2009 ஆம் ஆண்டுக்கான தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் வழங்கலுக்கான கூறுவிலைகள்" எனக் குறிப்பிட்டு 2009.05.12 ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக் கூடியவாறு நேரடியாக செயலக பிரதம கணக்காளர் அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் இடல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கேள்விகள் அன்றைய தினம் மு.ப. 11.00 மணிக்கு திறக்கப்பட்டு ஆராயப்படும். அதன்போது விண்ணப்பதாரரோ அல்லது அவரின் பிரதிநிதியொருவரோ சமுகமளிக்கலாம்.

விண்ணப்பப் படிவங்களை 2009.04.22 ஆம் திகதி தொடக்கம் செயலக களஞ்சிய நலன்புரிக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.

கீழ்க் குறிப்பிடப்படும் தளபாடங்களுக்கான மாதிரிகளை / படங்களை செயலக களஞ்சிய நலன்புரிக் கிளையில் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம். மாதிரிக்கொவ்வாத பொருட்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

1. *மரத்தளபாடங்கள்*
   - கைபிடிக் கதிரை
   - சாதாரண கதிரை
   - எழுதுநர் மேசை
   - பதவி நிலை உத்தியோகத்தர் மேசை
   - கணனி மேசை
2. *உருக்குத் தளபாடங்கள்*
   - உருக்கு அலுமாரி
   - கோவை அலுமாரி
3. *பிளாஸ்ரிக் தளபாடங்கள்*
   - பிளாஸ்ரிக் கதிரை
4. *அலுவலக உபகரணங்கள்*
   - வளிபதனாக்கி (Air Conditioner)
   - கணனி கதிரை(கைபிடியுடன்)
   - கணனி கதிரை (கைபிடி இல்லாது)
   - மேசை கணனி (Desk Top Computer)
   - மடிக் கணனி (Laptop Computer)
   - இரட்டிப்பு இயந்திரம் (Ronio Machine)
   - அச்சுப்பதிப்பி–சிறிது (Dot metix)
   - அச்சுப்பதிப்பி–பெரிது (Dot metix)
   - அச்சுப்பதிப்பி (Lazer Printer)
   - நிழல்படப்பிரதி இயந்திரம் (Photocopier)
   - திரையிடு கருவி (Multimedia Projector)
   - மின் சீராக்கி 500w (Stabilizer 500w)
   - மின் சீராக்கி 1000w (Stabilizer 1000w)
   - மின் சீராக்கி 2000w (Stabilizer 2000w)
   - இடையறா மின் வழங்கி (UPS)
   - விசைப்பலகை (Key board)
   - கணனி திரை அலகு எல்சி டி (Monitor-LCD)
   - தொலைநகல் இயந்திரம் (Fax Machine)
   - Digital Camera
   - Scanner
   - Mouse
   - மற்றும் உபகரணங்கள்

க.கணேஷ்,
மாவட்ட செயலர்,
யாழ்.மாவட்டம்.

(C-2395)

உலகிலுள்ள எல்லா உயிர்களிலும் மனிதன் ஒருவன்தான் கருணை காட்டி கஷ்டம் தாங்கி தியாகம் செய்யும் ஆற்றல் உடையவன்.

– டாக்டர் இராதாகிருஷ்ணன்

வலம்புரி

## அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வருவோரின் நலன்கள் கவனிக்கப்படவேண்டும்

யுத்தம் இடம்பெறும் வன்னிப் பகுதியிலிருந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு பல ஆயிரக் கணக்கான மக்கள் வந்தவண்ணமுள்ளனர்.

யுத்தப் பேரவலத்தில் சிக்கி உறவுகளைப் பறிகொடுத்து காலாகாலமாக சேர்த்து வைத்த தேட்டங்களையெல்லாம் குண்டுகளுக்கு தாரை வார்த்துவிட்டு வெறுங் கையோடு மக்கள் அரச கட்டுப்பாட்டுப் பகுதியை நோக்கி வந்தவண்ணமுள்ளனர்.

ஒட்டிய வயிறு, ஒடுங்கிய முகம், போஷாக்கின்மை என்ற அடையாளங்களோடு வருகின்ற மக்களை உரியவாறு பராமரிக்கும் தார்மீகப் பொறுப்பு அரசுக்கும், சர்வதேச பொது அமைப்புகளுக்கும் உண்டு.

நலன்புரி நிலையங்கள் என்ற குறுகிய எல்லைக்குள் மக்களை அடைத்து வைப்பதென்பது அவர்களை உடல் உள ரீதியில் மேலும் பாதிக்க வைக்கும்.

எனவே மிகக் குறுகிய காலத்திற்குள் அந்த மக்களை சுதந்திரமாக நடமாடுவதற்கும், தங்கள் உறவுகளோடு தொடர்பு கொள்வதற்குமான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

நலன்புரி நிலையங்கள் என்பதன் அர்த்தப்பாட்டை உணர்ந்து கொண்டு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பது அவசரமான விடயமாகும்.

கட்டாந்தரைகளில் மிகச்சிறிய கூடாரங்களை அமைத்து அதில் மக்களை குடியிருத்துவதென்பது தொற்றுநோய்கள் பரவுவதற்கும் கலாசாரப் பிறழ்வுகள் இடம்பெறுவதற்கும் வாய்ப்பாக அமையும்.

ஆகவே அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வருகின்ற மக்களை தகுந்த முறையில் போதிய மருத்துவ சுகாதார வசதிகளுடன் பராமரிக்க வேண்டும்.

இதற்கு மேலாக அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்துள்ள மக்களின் பாதுகாப்பு விடயத்தில் அதீதமான கவனமெடுப்பது காலத்தின் கட்டாய தேவையாகும்.

இது விடயத்தில் ஐ.நா. சபையின் தீவிர கண்காணிப்புத் தேவையாகின்றது.

இத்தகைய கண்காணிப்புக்கள் வவுனியாவிலுள்ள நலன்புரி நிலையங்களில் காணப்படுவதாக கூறப்படுகின்றது.

அதே கண்காணிப்பு யாழ்.குடாநாட்டுக்கும் அவசியமாகும்.

வன்னிப்பகுதியிலிருந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வருகின்ற மக்களின் உயிருக்கான உத்தரவாதத்தை வழங்குவதில் அரசு உறுதியாக இருக்கவேண்டும்.

இல்லையேல் கடந்த காலங்களில் நிகழ்ந்த விபரீதமான விளைவுகள் ஏற்படும் வாய்ப்புக்கள் நிறையவே உண்டு.

# இலங்கை விவகாரம் குறித்து ஐ.நா. பாதுகாப்பு பேரவையில் விவாதிக்கப்பட வேண்டும்

## அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்று வரும் யுத்த, நிலவரம் குறித்து ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவையில் விவாதிக்கப்பட வேண்டும் என்று அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் கோரிக்கை விடுத்துள்ளன.

இலங்கை நிலவரம் குறித்து கடந்த திங்கட்கிழமை கலந்துரையாடப்பட்டதாகவும், ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூனின் விசேட பிரதிநிதி விஜய் நம்பியாரின் அறிக்கை பாதுகாப்புப் பேரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மோதல் தவிர்ப்பு வலயத்தில் இலங்கை அரசாங்கத்தினால் நடத்தப்படும் தாக்குதல்கள் குறித்து ஆராயப்படவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

இலங்கை சூழ்நிலையை ஒரு விசேட சூழ்நிலையாகக் கருதி பாதுகாப்புப் பேரவையில் விவாதிக்கப்படவுள்ளதாக பாதுகாப்புப் பேரவையின் தலைவர் க்ளவுட் ஹெல்லர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பேரவையில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற மூடிய கதவு கூட்டத்தின் போது பாதுகாப்புப் பேரவை விவாதங்களின் மூலம் விடுதலைப் புலிகளுக்கு சட்ட அந்தஸ்து வழங்கப்படக் கூடாதென சீனா கோரிக்கை விடுத்திருந்ததாக இரகசியத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஓ-6)

# இலங்கை நிராகரித்த பிரதிநிதியை ஐ.நா. ஏற்றது நியாயமற்றது

## கெஹலிய ரம்புக்வெல தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் நிராகரித்த பிரித்தானியாவின் விசேட பிரதிநிதியை ஐக்கிய நாடுகள் சபை ஏற்றுக் கொண்டமை நியாயமற்றது என இலங்கை பாதுகாப்பு பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கூறியுள்ளார்.

இலங்கையின் விடயத்தில் உள்நுழைவதற்கு எவருக்கும் அனுமதி வழங்கப்போவதில்லையெனவும், பாதுகாப்புத் தரப்பினர் வெற்றிபெற்றுவரும் சூழ்நிலையில் சர்வதேச விமர்சனங்களுக்கு செவிமடுக்கப் போவதில்லையெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கையின் இனப்பிரச்சினை விடயம் குறித்துக் கையாள்வதற்குப் பிரித்தானியப் பிரதமரின் விசேட பிரதிநிதியின் நியமனத்தை ஜனாதிபதி தொடர்ச்சியாக நிராகரித்துள்ளார். அவ்வாறான நிலையில் அந்த விசேட பிரதிநிதியை ஐக்கிய நாடுகள் சபை அனுமதித்து, அவருடன் பேச்சு நடத்துவது நியாயமற்றது என அவர் குறிப்பிட்டார்.

“நாங்கள் இன்னமும் பிரித்தானியாவின் காலனித்துவத்தில் இல்லை. அவ்வாறெனின் ஏன் பிரித்தானியா எமது உள்விவகாரத்தில் தலையிட முயல்கிறது. அவ்வாறான தூதுவர் ஒருவரை ஐ.நா. ஏற்றுக்கொள்வது நியாயமற்றது. பல்வேறு நாடுகள் பல விதமான நிகழ்ச்சி நிரல்களுடன் செயற்படுகின்றபோதும், பயங்கரவாதத்தை ஒழிக்கும் வரை நாம் எவற்றையும் கவனத்தில் கொள்ளப் போவதில்லை.

இலங்கை விடயம் குறித்து ஆராய்வதற்கு விசேட பிரதிநிதி ஒருவரை அனுப்புவதற்கு ஐக்கிய நாடுகள் சபைக்கு அதிகாரம் இல்லை. ஐக்கிய நாடுகள் சபை பிரித்தானியாவினதோ அல்லது வேறெந்த நாட்டினதோ அதிகாரிகள் போலச் செயற்பட முடியாது என்று அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை விடயம் குறித்து ஆராய்வதற்குப் பிரித்தானியப் பிரதமர் கோர்டன் பிரவுனினால் நியமிக்கப்பட்ட விசேட பிரதிநிதியான டெஸ் பிரவுண் தற்பொழுது நியூயோர்க் சென்றுள்ளார். கடந்தம வாரம் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு திரும்பிய ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனின் அலுவலகச் சிரேஷ்ட அதிகாரியான விஜய் நம்பியாருடன் இலங்கையின் நிலைமைகள் குறித்துக் கலந்துரையாடுவதற்கே டெஸ் பிரவுண் நியூயோர்க் சென்றுள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட விஜய் நம்பியாரை பாதுகாப்புச் சபையில் விளக்கமளிக்க அனுமதிப்பதா இல்லையா என்பது பற்றி ஐ.நா. பாதுகாப்புச் சபை கடந்த திங்கட்கிழமை இரகசியச் சந்திப்பொன்றையும் நடத்தியுள்ளது. (ஓ-6)

## பிரான்ஸில் 15ஆவது நாளாக தொடரும் 4 இளைஞர்களின் உண்ணாநிலைப் போராட்டம்


பிரான்சில் 17 ஆவது நாளாக மக்கள் எழுச்சிப் போராட்டமும் 15 ஆவது நாளாக நான்கு இளைஞர்களின் உண்ணாநிலைப் போராட்டமும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இலங்கை அரசின் இனப்படுகொலையை நிறுத்தக் கோரி 17 நாட்களாக இரவு பகல் பாராது பிரான்சின் மனிதவுரிமைச் சதுக்கத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

உடனடியாக பெரும் மாற்றம் ஏற்படாவிட்டாலும் உண்ணாநிலையிருந்து உடல் வருத்தி, தொடர்ச்சியான மக்களின் ஒன்று கூடல் படிப்படியான மாற்றங்களை நிகழ்த்தத் தொடங்கியுள்ளன.

இதேவேளை, உண்ணாவிரதிகள் காத்திரமான முடிவு கிடைக்காதவிடத்து நீர் இன்றி உண்ணா நிலைப்போராட்டத்தை தொடரவிருக்கிறார்கள். எதிர்வரும் சனிக்கிழமை ஒரு மணிக்கு பிரான்சின் மனிதவுரிமைச் சதுக்கத்திலிருந்து நாடாளுமன்றம் நோக்கி பெருமளவு மக்கள் படையாய் திரண்டு பயணிக்கவிருக்கிறார்கள். இதற்கு பிரான்சில் வாழும் அனைத்து தமிழ் மக்களையும் இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. (ஓ-6)

# தர்மம் ஓங்க நட – பாபா

இன்றைய மனிதன் எதனை நோக்கிப் பயணிக்கின்றான் என்பதே இன்றைய கேள்வி; மனித வாழ்வோடு பிணையப்பட்டது இரண்டு வழிமுறைதான். தர்ம வழியொன்று மற்றையது அதர்மவழி. தர்மம் ஓங்கும் போது நாட்டின்; வீட்டின்



செழுமையும் அதர்மம் தலைவிரித்தாடும் போது அழிவின் சாயலும் நம் கண்முன்னே தெரியும். தெரிந்தாலும் அதன் விளைவும் பலனும் எவ்விதமாயின என்று சிந்திப்பதில்லை. சிந்தித்தாலும் அதற்கும் அடுத்தவரைச் சுட்டியே பதில் இறுக்கின்றோம். நம்மை நாம் சிந்திப்பதில்லை. என்னை நான் கேள்வி கேட்டேனா என்றால் இல்லை. சாயி மாதா அருளுகின்றார். ஒரு மனிதன் பூரண நற்குணமுடையவனாக வாழ வேண்டுமானால் உன்னையே நீ கேள்வி கேள். மற்றவருக்கு தலையிடி என்றால் சிறிய துன்பம். தனக்கு தலையிடி என்றால் உலகமே கூட வேண்டும் என்ற எண்ணம்.

இறைவன் படைப்பில் ஒவ்வொரு ஜீவனும் சமமே உலகை நோக்கினால் ஆண்டி அரசனாகின்றான். அரசன் ஆண்டியாகின்றான். ஏழை பணக்காரனாகின்றான். பணக்காரன் ஏழையாகின்றான். இவை நிலையில்லாதவை. இப்பிரபஞ்சம் முழுவதும் நிறைந்தவர் ஒரே இறைவன் தான். ஆதி முதல் இன்று வரை உருவான மனிதனின் வழி தவறிய வாழ்வு முறையினால் பாவத்தின் பாரம் கனக்க அதனை நீக்கும் பொருட்டு மனித உடல் போர்த்து தெய்வம் வந்துதிக்கின்றது. நேரிலேயே தர்மத்தைப் போதிக்கின்றது. போதனை ஏற்க மறுக்கும் அவன் தெய்வத்தையே கொல்ல முனைகின்றான்.

எல்லா மதங்களும் சத்யம், தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை என்பவற்றையே போதிக்கின்றன. வலியுறுத்துகின்றன. ஆனால் போதனையின்படி நடக்கின்றோமா என்றால் அதன் பூரணமான பதில் இல்லை என்பதே. அடுத்த ஜீவனைக் கொடுமைப்படுத்துவதே தனக்கு சந்தோஷத்தை கொடுப்பதாக நினைக்கின்றான். நன்மை செய்யா விட்டாலும் தீமையாவது செய்யாதிருந்தாலே அதுவே இறைவனுக்கு சமகாலத்தில் நாம் செய்யும் பெரும் புண்ணியமாகும்.

அடுத்தவருக்கு நாம் செய்யும் தீமையும், நன்மையும் அடுத்தகணமே நம் வீட்டுவாசலை உந்தித் தள்ளும். இவ்வாறு இருக்க எவ்வாறு துணிந்து கொடூரமான காரியத்தைச் செய்கின்றோம். நான் செய்யும் கொடூரம் எனக்கு மட்டுமல்ல என்முன்பின் சந்ததியையே உப்பு நீர் புகுந்த வயல் நிலம் போல் உவைய வைத்து விடும். அடுத்தவரின் ஒரு கண்ணைக் கெடுத்தவனின் பிள்ளைகள் அத்தனைக்கும் கண்பார்வையே இல்லை. அடுத்தவரை அணைத்து புசி என்று பசி போக்கியவருக்கு பெரும் காட்டிடையேயும் பசியாற அன்னம் அருள் பாலிக்கும் இது தெய்வ நியதி. கடவுளை நினைத்து நாம் நற்காரியங்கள் செய்யும் போது தேனை மட்டும் அருந்தும் தேனீயின் நிலைக்கு ஒப்பாகும் எம் மனம்.


யாதவன்

ஜெய் சாயிராம்

## வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

IIS நிறுவனத்தினால் எதிர்வரும் மே மாதம் 10 ஆம் திகதி அன்று ஆரம்பிக்கப்படவிருக்கும் தொழில் நிர்வாகத்தில் முதுமாணிக் கற்கைநெறி (Master of Business Administration) தொடர்பான வழிகாட்டல் கருத்தரங்கு 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 11.00 மணிக்கு இல.200, சிவன் பண்ணை வீதியில் அமைந்துள்ள IIS City Campus பிரதான மண்டபத்தில் நிறுவன இயக்குநர் கு.விக்னேஸ் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் மேற்படி கற்கைநெறி தொடர்பான பூரண விளக்கம் அளிக்கப்படவிருப்பதால் ஆர்வமுடையோர் கலந்து பயன்பெறுமாறு நிறுவன இயக்குநர் கு.விக்னேஸ் அழைப்பு விடுத்துள்ளார். (ஓ)




## தென்மராட்சி ஆரம்ப பாடசாலை கோலப் போட்டி முடிவுகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய ஆரம்பப் பிரிவுப் பாடசாலைகளிடையே நடத்தப்பட்ட கோலப் போட்டிகளில் சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெற்ற போட்டிகளில் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களது விபரம் கிடைக்கப் பெற்றுள்ளது.

இதில் மூன்று இடங்கள் பெற்றோரின் விபரம் வருமாறு,

*தரம் 1*

பி.குகானந்தி -மட்டுவில் அ.மி.த.க.பாடசாலை, ம.நிகேதன்-சாவ. இந்து ஆரம்பப் பாடசாலை,கோ. யகீர்த்தா- சாவ. இந்து ஆரம்பப் பாடசாலை.

*தரம் 2*

இ.கஜமுகன்-கைதடி முத்துக்குமார சுவாமி ம.வி.,ச.லதுசிகன்-சாவ. இந்து ஆரம்பப் பாடசாலை,ஜெ.ஜீவிகா- சாவ. இந்து ஆரம்பப் பாடசாலை.

*தரம் 3*

த.தட்சியா-சாவ மகளிர் கல்லூரி, ப.நர்மதன்- சாவ இந்து ஆரம்பப் பாடசாலை, இ.பக்சிகா- சாவ. அமிர்தாம்பிகை வித்தி.

*தரம் 4*

ந.வைஸ்ணவி-சாவ. இந்து ஆரம்பப் பாடசாலை, ம.கல்ப்பனா- சாவ. சித்தியம்மன் பாடசாலை,சு.யதிஷா- சாவ. இந்து ஆரம்பப் பாடசாலை.

*தரம்5*

செ.மேரிசுகன்யா-சாவ.றோ.க.த.க. பாடசாலை,ரா.தர்சன்-சாவ.இந்து ஆரம்பப் பாடசாலை,ச.பிரியங்கா-மீசாலை கமலாம்பிகை.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் ஐந்து இடங்களைப் பெற்ற 25 பேருடன் சாதாரண தேர்ச்சி பெற்றவர்கள் 50பேருக்கும் அடுத்த தவணை ஆரம்பத்தில் சான்றிதழ் வழங்கப்படும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (ஓ-29)

## விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

கைதடி கிழக்கு சனசமூக நிலைய பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு கைதடி கிழக்கு ச.ச.நி. தலைவர் த.நாகராசா தலைமையில் கைதடி கிழக்கு வீரமாகாளி அம்மன் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் வே.சிவராஜலிங்கம் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய அதிபர் ச.ஞானலிங்கம், கைதடி பொது சுகாதார உத்தியோகத்தர் ஈஸ்வரன், கைதடி இரட்சனை சேனை இல்லம் கப்டன் ஜீவராணி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ-4)

⌘⌘⌘

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு கலைவாணி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கலைவாணி வியைாட்டுக் கழக மைதானத்தில் சி. தியாகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.


இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வல்வை நகரசபை செயலாளர் கு.அமிர்தலிங்கம் கலந்துகொள்ளவுள்ளார். (ஓ-4)

## கலைப்பீட மாணவர்களுக்கான அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட, இராமநாதன் நுண்கலைக்கழக அனைத்து வருட மாணவர்களுக்குமான கல்வியாண்டு 2007/2008 முதலாம் அரையாண்டு குறுகியகால விடுப்பு (Mid Semester Vacation) நிறைவடைந்து விரிவுரைகள் யாவும் இன்று வியாழக்கிழமை 23 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக பதிவாளர் அறியத் தந்துள்ளார். (ஓ)





கொட்டடி கவிபாரதி சனசமூக நிலையத்தால் நடத்தப்பட்ட கரப்பந்தாட்ட போட்டியின் இறுதிப் போட்டியில் சோலைபுரம் அடிடாஸ் அணியை எதிர்த்தாடிய அரியாலை A.K.S.அணி வெற்றிபெற்றது.

இறுதிப் போட்டியில் கலந்துகொண்ட இரு அணி வீரர்களை முதலாவது படத்திலும், பிரதம விருந்தினர் வெற்றிபெற்ற அணிக்கான வெற்றிக் கிண்ணத்தை வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## இடம்பெயர்ந்த மக்களை தங்கவைக்க நடவடிக்கை

(சாவகச்சேரி)

வன்னி யுத்தப் பிரதேசத்தில் இருந்து அழைத்து வரப்படும் மக்களை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் தங்கவைக்கப்படுவதுடன், மேலதிக மக்கள் மீசாலை வீரசிங்கம் வித்தியாலயத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் சங்கத்தானை இந்துக் கல்லூரி மற்றும் கச்சாய் C.T.M.S.பாடசாலை ஆகிய இடங்களிலும் தங்க வைக்கப்படுவதாகவும் தம்புதோட்டப் பிரதேசத்தில் மக்களை தங்க வைப்பதற்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டு வருவதாகவும் அறிவிக்கப்படுகின்றது. (ஓ-29)

## பயிற்சிநெறிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொழில்நுட்ப கல்லூரியில் 2009 கற்கை ஆண்டிற்கான புதிய பயிற்சி நெறிகள் யாவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நேர்முகப் பரீட்சையில் தெரிவுசெய்யப்பட்டவர்கள் தமது பதிவுகளை தொழில்நுட்பக் கல்லூரி பதிவாளர் காரியாலயத்தில் பதிவுகளை மேற்கொண்டு பயிற்சி நெறியில் கலந்துகொள்ளுமாறு தொழில்நுட்பக் கல்லூரி பணிப்பாளர் ந.யோகராஜன் தெரிவித்துள்ளார். (ஓ-7)

## வடமராட்சியில் இடைத்தங்கல் முகாம் அமைக்க நடவடிக்கை

(அல்வாய்)

வன்னி யுத்தப் பிரதேசத்திலிருந்து விடுவிக்கப்பட்டு அழைத்துவரப்படும் மக்களை தங்க வைப்பதற்காக வடமராட்சியில் வட இந்து மகளிர் கல்லூரி, உடுப் பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலை, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் ஆகிய மூன்று பாடசாலைகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-19)

## உலக புத்தக தின விழா

(பொன்னாலை)

வலிகாமம் மேற்கு பிரதேச சபையினால் ‘‘உலக புத்தக தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் நூல்கள் கண்காட்சியும் அன்றைய இன்றைய தகவல் தொடர்பாடல் சார்பான பெட்டகக் கண்காட்சியும்’’ இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு பிரதேச சபையின் கீழ் இயங்கும் வட்டுக்கோட்டை பொது நூலகத்தில் சபைச் செயலாளர் எஸ். புத்திசிகாமணி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தரும், யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக உத்தியோகத்தராகிய ம.ஞானவேல்ராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இக் கண்காட்சியில் நூலக வாசகர்கள், மாணவர்கள், நலன்விரும்பிகள் மற்றும் ஆர்வ லர்கள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு பிரதேச சபை கேட்டுக்கொள்கின்றது. (ஓ-49)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியில் சான்றிதழ் தரம் சிங்களம் மற்றும் டிப்ளோமா முன்பள்ளி பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி பயிற்சிநெறிகள் சனி, ஞாயிறு தினங்களில் இடம்பெறுவதுடன் இப் பயிற்சி நெறிக்காக க.பொ.த.சாதாரண தரத்தில் சித்தியடைந்தவர்களிடம் இருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப் படிவத்தை தொழில்நுட்பக் கல்லூரியில் பெற்று பூர்த்தி செய்து இம் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறும் மேலதிக விபரங்களை தொழில்நுட்ப கல்லூரியில் பார்வையிடுமாறும் தொழில்நுட்பக் கல்லூரி பணிப்பாளர் ந.யோகராஜன் தெரிவித்துள்ளார். (ஓ-7)


## இலங்கை வங்கியும் வலம்புரியும் இணைந்து நடத்தும்


BOC ලංකා බැංකුව இலங்கை வங்கி

### க.பொ.த. உயர்தர (2008) "3A", "2AB" சித்தி பெற்ற யாழ் வலய மாணவர்களுக்கான கௌரவிப்பு

| | | |
|---|---|---|
| இடம் | : | யாழ்.செயலக மாநாட்டு மண்டபம் |
| காலம் | : | 26.04.2009 |
| நேரம் | : | காலை 8.30 மணி |
| தலைமை | : | திரு ந.சிவரட்ணம் (உதவிப் பொதுமுகாமையாளர், இலங்கை வங்கி-வட பிராந்தியம்) |
| வரவேற்புரை | : | திரு.இ.ஜயேந்திரா (செயற்பாட்டு முகாமையாளர்) |
| ஆசியுரை | : | திரு.கே. கணேஷ் (அரசாங்கஅதிபர் -யாழ்ப்பாணம்) |
| சிறப்புரை | : | பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை (முன்னாள் துணைவேந்தர் யாழ்.பல்கலைக்கழகம்) |
| கருத்துரை | : | திரு வி.ரி.செல்வரட்ணம் (மேலதிக பிராந்திய கல்விப் பணிப்பாளர், யாழ். கல்வித் திணைக்களம்)<br>திருமதி அ.வேதநாயகம் (யாழ்.கல்விப்பணிப்பாளர்)<br>திரு.சி.வெற்றிவேலாயுதம் (நிர்வாக இயக்குநர் -வலம்புரி)<br>திரு.என்.விஜயசுந்தரம் (பிரதம ஆசிரியர் -வலம்புரி)<br>திரு.கே. பாலசுப்பிரமணியம் (முன்னாள் உதவிப் பொதுமுகாமையாளர், இலங்கை வங்கி யாழ்ப்பாணம்) |
| விரிவுரை நிகழ்ச்சி | : | “Career Development” திரு.எம்.சின்னத்தம்பி (சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்) |
| | | சான்றிதழ் மற்றும் அடையாளப் பரிசு வழங்கல் |
| நன்றியுரை | | |

கௌரவிக்கப்படும் மாணவர்கள் தமது பாடசாலை அதிபர்களுடன் சீருடையில் சமுகம் தருவது சிறப்பானது.

# டெக்கான் சார்ஜர்ஸ் அணி வெற்றி



(கேப்டவுன்)

கில்கிறிஸின் அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலம் டெக்கான் சார்ஜர்ஸ் அணி 24 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியை வீழ்த்தியது தென்னாபிரிக்காவில் நடைபெற்று வரும் இந்தியன் பிறிமியர் லீக் (ஐ.பி.எல்.) 2 ஆவது இருபது-20 தொடரில் நேற்று கேப்டவுனில் நடைபெற்ற 8ஆவது லீக் போட்டியில் கில்கிறிஸ்ட் தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணியும் பீற்றர்சன் தலைமையிலான பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய டெக்கான் சார்ஜர்ஸ் அணி, கில்கிறிஸ்டின் அதிரடியான ஆரம்பத்தின் மூலம் 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 184 ஓட்டங்களை குவித்தது.

இதில் அணித்தலைவர் கில்கிறிஸ்ட் 45 பந்துகளில் (6 பவுண்டரிகள்,5 சிக்ஸர்கள் அடங் கலாக) 71 ஓட்டங்களையும் ரோகித் சர்மா 30 பந்துகளில் (ஒரு பவுண்டரி,5 சிக்ஸர்கள் அடங்கலாக) 52 ஓட்டங்களையும் குவித்தனர்.

பந்து வீச்சில் அணித்தலைவர் பீற்றர்சன் 2விக்கெட்டுக்களைவீழ்த்தினார்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 185 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி 20 ஓவர்களில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 160 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 24 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் விரோட் ஹோலி 32 பந்துகளில் (7 பவுண்டரிகள் அடங்கலாக) 50 ஓட்டங்களையும் ராகுல் ராவிட் 27 பந்துகளில் (5 பவுண்டரிகள்,2 சிக்ஸர்கள் அடங்கலாக) 48 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் ஸ்ரைரிஸ் 3 விக்கெட்டுக்களையும் ஆர்.பி.சிங் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் டெக்கான் சார்ஜர்ஸ் அணி 2ஆவது வெற்றியை பதிவு செய்ததுடன் தனது 3ஆவது போட்டியில் விளையாடிய பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி இரண்டாவது தோல்வியை சந்தித்தது.

ஆட்ட நாயகனாக டெக்கான் சார்ஜர்ஸ் அணித்தலைவர் கில்கிறிஸ்ட் தெரிவானார்

## கில்கிறிஸ்ட் சிக்ஸர் அடித்தால் ஊனமுற்ற குழந்தைகளுக்கு சைக்கிள்



(டர்பன்)

ஐ.பி.எல். தொடரில் கில்கிறிஸ்ட் விளாசும் சிக்ஸர் மூலம் ஊன முற்ற குழந்தைகள் பயன்பெறவுள்ளனர்.

இவரது ஒவ்வொரு சிக்ஸருக்கும் விசேட சைக்கிள் ஒன்று பரிசாக வழங்கப்படும்.

இம்முறை 25 சிக்ஸர் அடித்து 25 ஊனமுற்ற குழந்தைகளுக்கு உதவ இலக்கு நிர்ணயித்துள்ளார் கில்கிறிஸ்ட்.

அவுஸ்திரேலியாவின் நட்சத்திர விக்கெட் காப்பாளர் மற்றும் அதிரடி துடுப்பாட்ட வீரர் கில்கிறிஸ்ட். சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றபின் ஐ.பி.எல்.,டெக்கான் சார்ஜர்ஸ் அணியின் தலைவராக உள்ளார்.

தற்போது தென்னாபிரிக்காவில் நடக்கும் ஐ.பி.எல். இருபது-20 தொடரில் இவர் அடிக்கும் ஒவ்வொரு சிக்ஸருக்கும் ஒரு ஊனமுற்ற குழந்தைக்கு பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட சைக்கிள் பரிசாக வழங்கப்படும்.

இதனை ஆம்வே மற்றும் ஊனமுற்றோருக்கு தொழில்நுட்ப உதவி அளிக்கும் நிறுவனமொன்றும் இணைந்து வழங்குகின்றன.

இது குறித்து ஆம்வே செய்திச் தொடர்பாளர் மிகாயல் கோல்ட் வெல் கூறுகையில்,

கில்கிறிஸ்ட் உடன் இணைந்து செயற்படுவது மகிழ்ச்சி அளிக்கிறது. ஊனமுற்றோர் சேவைக்கு தொடர்ந்து ஆதரவு அளித்து வருகிறார். ஊனமுற்ற குழந்தை களுக்கு என பிரத்தியேகமாக சைக்கிள் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனால் எவ்வித பிரச்சினையும் இல்லாமல் சைக்கிள் ஓடலாம் என்றார்.

கில்கிறிஸ்ட் கூறுகையில், 3 குழந்தைகளுக்கு அப்பா என்ற முறையில் சைக்கிள் ஓடுவது குழந்தைகளுக்கு எவ்வளவு மகிழ்ச்சியான விடயம் என்பதை அறிவேன். இம்முறை நான் அடிக்கும் ஒவ்வொரு சிக்ஸரும் ஒரு ஊனமுற்ற குழந்தைக்கு உற்சாகத்தை தரும்.

எனவே குறைந்த பட்சம் 25 சிக்ஸர்கள் அடிக்க முயல்வேன் என்றார் கில்கிறிஸ்ட்.

## சீன கிராண்ட்பிரிக்ஸில் ஜேர்மனி வீரர் வெற்றி

(சாங்காய்)

சீன கிராண்ட்பிரிக்ஸ் பார்முலா-1 கார் பந்தய போட்டியில் ஜேர்மனியை சேர்ந்த செபஸ்டியன் வெட்டல் முதலாம் இடத்தை பிடித்தார்.

கார்பந்தயங்களில் மிகவும் பிரபல மான பார்முலா-1 கார் பந்தயம் இந்த ஆண்டு உலகம் முழுவதும் 17 இடங்களில் நடைபெறுகிறது.

17சுற்றுகள் முடிவில் அதிக புள்ளிகள் பெறுபவர் உலக சம்பியன் பட்டத்தை வெல்வார்.

இதன் மூன்றாவது சுற்றான சீன கிராண்ட் பிரிக்ஸ் போட்டி சங்காயில் நேற்று முன்தினம் நடைபெற்றது. மழைக்கு மத்தியில் நடைபெற்ற இந்த போட்டி கடும் விறுவிறுப்பாக இருந்தது.


இதில் ஜேர்மனியைச் சேர்ந்த இளம் வீரர் செபஸ்டியன் வெட்டல் (ரெட்புல் அணி)1:57:43:48 வினாடியில் பந்தய தூரத்தை கடந்து முதலிடத்தை பிடித்தார்.



அதே அணியைச் சேர்ந்த மார்ட் வெப்பர் (அவுஸ்ரேலியா) இரண்டாம் இடம் பெற்றார்.

முதல் பந்தயமான அவுஸ்திரேலியன் கிராண்ட்பிரிக்ஸிலும் இரண்டாவது பந்தயமான மலேசியன் கிராண்ட்பிரிக்ஸிலும் முதல் இடம் பிடித்த இங்கிலாந்து வீரர் ஜென்சன் பட்டனால் மூன்றாவது இடத்தையே பிடிக்க முடிந்தது.

## பீற்றர்சனுக்கு எச்சரிக்கை



(டர்பன்)

நடுவரின் முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்த பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி தலைவர் பீற்றர்சனுக்கு ஐ.பி.எல். நிர்வாகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சென்னை சுப்பர் கிங்ஸ், பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணிகள் மோதிய ஐ.பி.எல்.லீக் போட்டி போர்ட் எலிசபெத்தில் கடந்த திங்கட் கிழமை நடந்தது.

இப் போட்டியில் பெங்களூர் அணி தலைவர் பீற்றர்சன் முதல் பந்திலேயே சென்னை வீரர் முத்தையா முரளிதரன் பந்து வீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். அதிருப்தியுடன் அரங்கு திரும்பிய பீற்றர்சன் பந்து துடுப்பில் பட்டதாக தெரிவித்தார்.

நடுவர்முடிவுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் பேசிய பீற்றர்சனுக்கு ஐ.பி.எல்.நிர்வாகம் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது. ஆனால் தண்டனை எதுவும் அளிக்கப்பட வில்லை.

## மழையால் போட்டி ரத்து


(டர்பன்)

ஐ.பி.எல் தொடரில் மும்பை இந்தியன்ஸ்,ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகளுக்கு இடையிலான லீக் போட்டி மழை காரணமாக கைவிடப்பட்டது. இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) சார்பில் இரண்டாவது இருபது-20 தொடர் தென்னாபிரிக்காவில் நடக்கிறது.

நேற்று முன்தினம் 7ஆவது லீக் போட்டியில் சச்சின் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியும் வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் சந்திக்க இருந்தது.

ஆனால் மழை தொடர்ந்து பெய்ய ஒரு பந்து கூடவீசப்படாத நிலையில் போட்டி கைவிடப்படுவதாக நடுவர்கள் அறிவித்தனர். இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வழங்கப்பட்டது.

## சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம்...





அவுஸ்ரேலிய, மேற்கிந்திய தீவுகள் அணிகள் கொழும்பில் 1996ஆம் ஆண்டு உலகக் கிண்ண தொடர் கால பகுதியில் காணப்பட்ட பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக இலங்கைக்கு வரவில்லை.

இதனால் இரு அணிகளுடனான லீக் போட்டியிலும் இலங்கை அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. இந்நிலையில் 1996ம் ஆண்டு மார்ச் 2ஆம் திகதி டில்லியில் நடைபெற்ற போட்டியில் இந்தியா-இலங்கை அணிகள் மோதின . இப்போட்டியில் முரளிதரன்அணியில் சேர்க்கப்பட்டார்.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது. இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 50 ஓவர்களில் 3 விக்கெட்டுகளையிழந்து 271 ஓட்டங்களை எடுத்தது.

இதில் முரளிதரன் 10 ஓவர்கள் பந்து வீசி 42 ஓட்டங்களைக் கொடுத்து விக்கெட் எதனையும் வீழ்த்தவில்லை.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 48.4 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை மாத்திரமிழந்து 272 ஓட்டங்களைக் குவித்து 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. முதல் நான்கு லீக் போட்டிகளில் வெற்றி பெற்ற இலங்கை அணி அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்ற நிலையில் ஐந்தாவது லீக் போட்டியில் கடக்குட்டி கென்யா அணியுடன் மோதியது.

கண்டி அஸ்கிரிய மைதானத்தில் 1996ஆம் ஆண்டு மார்ச் 6ஆம் திகதி நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கென்யா அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய, இலங்கை அணி 50 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களையிழந்து 398 ஓட்டங்களை குவித்தது. இதன் ஒருநாள் சர்வதேசப் போட்டி வரலாற்றில் அப்போது இலங்கை அணி அதிக பட்ச ஓட்டங்களைக் குவித்துசாதனை படைத்தது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கென்யா அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களையிழந்து 254 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 144 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. இதில்விசேட அம்சமாக முரளிதரனுக்கு இரண்டாவது பந்து வீச்சாளராக வாய்ப்பு வழங்கப்பட்டது. இந்நிலையில் 10 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்ட மற்ற ஓவர் உட்பட40 ஓட்டங்களைக் கொடுத்து சுடம்மா (27), அணித்தலைவர் உடம்போ (0) ஆகியோரை வெளியேற்றி 2 விக்கெட்டுகளை வீழ்த்தி அசத்தினார்.


பாலா

## எண் விளையாட்டு-60



***போட்டிவிதிகள்:*** மேலிருந்து கீழ் தொடங்கும் வெள்ளைக் கட்டங்ளில் நிரப்பப்படும்எண்களின் கூட்டுத் தொகை, கட்டங்களின் மேல்புறத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்ணுக்கு சம மாகவர வேண்டும். இடமிருந்துவலமாக செல்லும் கட்டங்களுக்கும் இதே விதிதான். அக்கட்டங் களுக்கான கூட்டுத் தொகை இடப் புறம் கொடுக்கப்பட்டுள் ளது. 1 முதல்9 வரையான எண்களை பயன் படுத்த வேண்டும். ஆனால் ஒருவரிசையில் பயன்படுத்தியஎண்திரும்பவரக் கூடாது.

### நேற்றைய பகுதிக்கான விடை



மாநகர சபை, யாழ்ப்பாணம்.



## வன்னியிலிருந்து வந்த...

900 மக்கள் வன்னியிலிருந்து யாழ். குடாநாட்டுக்குள் இடம்பெயர்ந்துள்ளதாகவும் யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

**தென்மராட்சியில்**
**3 பாடசாலைகளில் தங்க வைப்பு**

கடந்த மூன்று தினங்களாக வன்னியிலிருந்து படகுகள் மூலம் வடமராட்சிக்கு வந்த மக்கள் சாவகச்சேரி மகளிர் கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் மற்றும் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான அடிப்படை வசதிகளை சாவகச்சேரி பிரதேச செயலகம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

அத்துடன் கொடிகாமத்தில் முன்னர் இராணுவ முகாமாக இருந்த இடத்தில் வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களை தங்க வைப்பதற்கு புதிதாக நலன்புரி முகாம் அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இது தொடர்பாக பாடசாலை அதிபர்களுடன் வலயக்கல்விப் பணிப்பாளர்கள் கலந்துரையாடியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை வன்னியிலிருந்து இடம் பெயர்ந்து வரும் மக்களின் தொகை அதிகரித்து வருவதால் கோப்பாய், யாழ்ப்பாணம் மற்றும் வடமராட்சி பிரதேசங்களில் பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களை தங்க வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாக தெரியவருகிறது.

இதேவேளை வன்னியிலிருந்து இடம் பெயர்ந்து யாழ்.நோக்கி வரும் மக்களை தங்க வைப்பதற்கு வடமராட்சியில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தை தயார் நிலையில் வைத்திருப்பதாக கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்தார்.

நேற்று மாலை வடமராட்சிப் பகுதியில் இடம்பெயர்ந்த மக்கள் தங்க வைக்கப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

யாழ்.அரச அதிபரின் வேண்டுகோளுக்கு இணங்க இப்பாடசாலை இடம்பெயர்ந்தோர் தங்கும் முகாமாக அமையவுள்ளதாகவும் இடம்பெயர்ந்தோர் தொகை அதிகரிக்கப்பட்டால் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியையும் முகாமாக பயன்படுத்தவுள்ளதாகவும் தெரிவித்தார்.

நேற்று மாலைவரை கரவெட்டி பிரதேச செயலக அதிகாரிகள் அவ்விடத்தில் கூடியிருந்தனர்.

இதேவேளை இடம்பெயர்ந்துவரும் மக்களை பார்ப்பதற்காக உறவினர்கள் அதிகளவில் பாடசாலை முன்பாக எதிர்பார்த்து நிற்பதாகவும் தெரியவருகிறது. (ச-5,10)

## ஒரு இலட்சத்துக்கும்...

தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள இராணுவப் பேச்சாளர் உதய நாணயக்கார, விடுதலைப்புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்த சுமார் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு வந்துள்ளார்கள்.

மோதல்களற்ற பிரதேசத்தின் வட பகுதியில் மூன்றில் இரண்டு பகுதியினை படையினர் கைப்பற்றியுள்ளனர். எஞ்சியோரையும் அங்கிருந்து விடுவித்து அந்தப் பிரதேசங்களையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரும் நடவடிக்கையினை படையினர் மேற்கொண்டு வருகிறார்கள் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதுவரை அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்துள்ள மக்களில் சுமார் 3 ஆயிரம் பேர் தாங்கள் விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்திருந்தவர்கள் அல்லது சம்பந்தப்பட்டவர்கள் என ஒப்புக் கொண்டுள்ளதாகவும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

புதுமாத்தளன் பிரதேசத்திற்குள் பிரவேசித்துள்ள இராணுவத்தின் 58-வது படைப் பிரிவினர் புதுமாத்தளன் வைத்தியசாலையையும் கைப்பற்றியுள்ளனர்.

பொதுமக்களுக்காக பாதுகாப்பு வலயத்தில் அமைக்கப்பட்டிருந்த இந்த வைத்தியசாலையை புலிகளே பயன்படுத்தி வந்துள்ளனர்.

புதுமாத்தளன் பகுதிக்குள் பிரவேசித்து முன்னேறிவரும் இராணுவத்தின் 58-வது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் சவேந்திர சில்வா தலைமையிலான படைப் பிரிவினர் புதுமாத்தளன் மேற்குப் பிரதேசத்திலிருந்து கிழக்கு பிரதேசம் வரையிலான கரையோரத்தையும் கைப்பற்றி தமது பூரண கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துள்ளனர்.

இதேவேளை கைப்பற்றப்பட்டுள்ள பிரதேசங்களில் தமது நிலைகளை பலப்படுத்தி வரும் இராணுவத்தினர் புலிகளின் கவச வாகனம் ஒன்றையும் தாக்கி அழித்துள்ளனர்.

புதுமாத்தளன் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த மூன்று கிலோமீற்றர் நீளமான மண் அணையை படையினர் கைப்பற்றியதை அடுத்து அங்கிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களை படையினர் மீட்டெடுத்தனர்.

அதனைத் தொடர்ந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை நோக்கி சாரை சாரையாக மக்கள் வர ஆரம்பித்தனர் என்றார்.(ச-14)

## பசில் எம்.பி...

வெளியேறிவிட்டனர். இந்நிலையில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குத் தேவையான நிவாரணப் பணிகளை மேற்கொள்வதில் இலங்கை அரசு தீவிரமாக களம் இறங்கியுள்ளது.

இதன் முதற்கட்டமாக இந்தியாவுடன் பேச்சு நடத்த ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார்.

இதற்காக ஜனாதிபதியின் சிறப்பு ஆலோசகரும், சகோதரருமான பசில் ராஜபக்ஷவை இந்தியாவுக்கு அனுப்ப உள்ளார். (ச-5)

## மக்கள் கொல்லப்படுவதை...

இழப்புக்கள் ஏற்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. இதனை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் கூறியுள்ளார்.

பொது மக்களுக்காக அரசாங்கமே பாதுகாப்பு வலயத்தை உருவாக்கியது. அவர்களே அந்த பகுதியிலுள்ள மக்கள் மீது நடத்தும் தாக்குதல்கள் நிறுத்தப்பட்டு, உயிரிழப்புக்கள் நிறுத்தப்படவேண்டும் என அமைச்சர் தெரிவித்தார்.

தமிழ் மக்களுக்காக போராடுவதாகவே விடுதலைப் புலிகள் கூறுகின்றனர். எனவே பாதுகாப்பு வலயத்திலிருந்து வெளியேற விரும்பும் மக்களை அவர்கள் வெளியேற அனுமதிக்க வேண்டும். அவர்கள் மீது துப்பாக்கி சூடுகளை நடத்தக் கூடாது என சொல்ஹெய்ம்குறிப்பிட்டுள்ளார்.

மோதல்களை முடிபிற்கு கொண்டு வர விடுதலைப்புலிகளும் இலங்கை அரசாங்கமும் அரசியல் தீர்வொன்றுக்கு செல்வார்களாயின் பொதுமக்களுக்கு ஏற்படும் இழப்புக்கள் குறையும் எனக் குறிப்பிட்ட எரிக் சொல்ஹெய்ம் ஐ.நா செயலாளர் நாயகத்தின் கோரிக்கைக்கு அமைய இடம் பெயர்ந்த மக்களுக்கான மனித நேய உதவிகளை இலங்கை அரசாங்கம் வழங்க வேண்டும் என்றார்.

பாதுகாப்பு வலயத்திலிருந்து வெளியேறிய மக்கள் உரிய முறையில் பராமரிக்கப் படுவார்கள் என நோர்வே எதிர்பார்க்கிறது. அவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். இடம் பெயர்ந்தவர்கள் காணாமல் போவதை தவிர்ப்பதற்கு அவர்கள் அனைவரும் பதிவு செய்யப்பட வேண்டும். கூடிய விரைவில் இடம் பெயர்ந்த மக்கள் தமது இடங்களில் மீளக்குடியமர்த்தப்பட வேண்டும் என அவர் கூறினார். (ச-5)

**Brown & Co.Ltd**

**வாடிக்கையாளர்களுக்கு**

**ஓர் இடமாற்ற அறிவித்தல்**

எமது அன்பான வாடிக்கையாளர்களுக்கு இதுவரை காலமும் 89, ஸ்ரான்லி வீதி, யாழ். என்னும் முகவரியில் இயங்கி வந்த எமது கிளை காட்சியறை 20.04.2009 தொடக்கம் 62/16, ஸ்ரான்லி வீதி, (C.S.P. கொமர்ஷல் வங்கி அருகாமையில்) யாழ். என்னும் முகவரியில் இடமாற்றம் பெற்று இயங்கி வருகின்றது என்பதை அன்புடன் அறியத்தருகிறோம்.

*அனைவரினதும் அன்பான ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம். நன்றி*

தொடர்புகளுக்கு: 0212224040

-முகாமையாளர்.

(C-2412)

## முல்லைத்தீவு பாதுகாப்...

அமைச்சர் கூறியதாவது,

இராணுவத்தின் 55ஆம் 58ஆம் படையணியினர் பாதுகாப்பு வலயத்துக்குள் புகுந்து பொதுமக்களை விடுவித்துக் கொண்டு தெற்கு பக்கம் நோக்கி முன்னேறுகின்றனர். இன்னும் 8 கிலோ மீற்றர் தூரமான நிலப் பரப்பு மட்டுமே புலிகளிடம் எஞ்சியுள்ளது. இதற்குள்தான் பிரபாகரனும் மறைந்துள்ளார் என நம்புகிறோம்.

புலிகளின் தலைவரை காப்பாற்றும் நோக்கில் இப்பிரதேசத்தில் சுய விருப்பத்துடனேயே பொது மக்கள் தங்கியுள்ளனர் என்ற பொய் பிரசாரம் இப்போது முறியடிக்கப்பட்டுள்ளது .

புலிகளிடமிருந்து விடுதலை பெற அவர்களுக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை தமிழ் மக்கள் நன்கு பயன்படுத்தி கொண்டனர். கையில் கிடைத்த பொருட்களுடன் கடல் ஏரியில் மார்பளவு நீரில் இறங்கியேனும் தப்பி செல்ல அவர்கள் காட்டிய வேகம் அதனை நன்கு நிரூபிக்கின்றது.

கடந்த 72 மணி நேரத்தில் 81 ஆயிரத்து 420 சிவிலியன்களை படையினர் புலிகளிடமிருந்து விடுவித்துள்ளனர். இவர்கள் அனைவரும் இப்போது பதிவு செய்யப்பட்டுள்ளனர். இன்னும் பெரும் தொகையினரை படையினர் விரைவில் விடுவிப்பார்கள் என எதிர்பார்க்கிறோம்.

இவ்வாறு விடுவிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உணவு மற்றும் மருத்துவ உதவிகளை படையினர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஒத்துழைப்புடன் வழங்கி வருகின்றனர் என்றும் அமைச்சர் கூறினார். (ச-5)

## பாதுகாப்பு வலயம் மீது...

அத்துடன் பிரதேசங்களில் இருந்த மக்களின் நிலையான வீடுகள், இடம்பெயர்ந்த மக்களின் கூடாரங்கள் எரிந்து நாசமாகியுள்ளன. வலைஞர்மடத்தில் இயங்கிவந்த நட்டாங் கண்டல் மருத்துவமனை மிக மோசமாக சேத மடைந்துள்ளது.

இதேவேளையில் கடந்த இரு நாட்களில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 2 ஆயிரம் வரையான மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 3 ஆயிரத்துக்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் ஆயிரத்து 700 பேர் உயிராபத்தான நிலையில் முள்ளிவாய்க்கால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களை ஏற்றிச் செல்ல அனைத்துலக செஞ்சிலுவை சங்க்க் குழுவின் கிறீன் ஓசன் கப்பல் நேற்று முள்ளிவாய்க்கால் பகுதிக்கு சென்றுள்ளது.

ஆனால் கப்பலை நோக்கி படையினர் பகுதியில் இருந்து பீரங்கித் தாக்குதல் நடத்தப் பட்டதால் கப்பல் மீண்டும் ஆழ்கடலுக்குச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதனையடுத்து பல மணிநேர தாமதத்தின் பின்னர் கப்பல் கரையிலிருந்து ஒரு கிலோமீற்றருக்கு அப்பால் தரித்து நின்றது.

நேற்று மாலை 6.30 மணிக்கு 354 நோயாளர்கள் மட்டும் கப்பலில் ஏற்றப்பட்டனர். 500 நோயாளர்களை ஏற்றுவதற்கே முன்னர் திட்டமிடப்பட்டிருந்தது.

அதேவேளையில் அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கக்குழுவின் பொறுப்பதிகாரி படையினரின் தாக்குதல் அச்சம் காரணமாக கரைக்கு வரவில்லை. அவர் கப்பலிலேயே நின்றுவிட்டார்.

இந்நிலையில் முல்லைத்தீவு மேலதிக அதிபர் பார்த்தீபன், கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, கத்தோலிக்க அருட்தந்தை கமல்ராஜ் அடிகளார் ஆகியோர் படகில் கப்பலுக்குச் சென்று மக்களின் நிலைமைகள் குறித்து எடுத்து விளக்கினர்.

உணவுக்கப்பல் இன்று வரும் என்று மேலதிக அரச அதிபர் பார்த்தீபனுக்கு கப்பலில் இருந்த அனைத்துலக செஞ்சிலுவைச் சங்க அதிகாரி தெரிவித்தார்.

அதேவேளையில் படையினர் நடத்திய தாக்குதலில் காயமடைந்த அருட்தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளாரும் கப்பலில் கொண்டு செல்லப்பட்டார் எனத் தெரிவிக்கப் பட்டது. (எ-3,5,14)

## பயங்கரவாதத்தை ஒழிக்க...

தொழிற்துறை மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களில் பயிற்சி பெறும் மாணவ மாணவிகள் அதிகாரிகளுடனான சந்திப்பு நேற்று புதன்கிழமை அலரி மாளிகையில் இடம்பெற்றபோதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு ஜனாதிபதி மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது,

யுத்த சூனியப் பிரதேசமாக பிரகடனப் படுத்தப்பட்ட ஒரு சிறிய பிரதேசத்திற்குள் எமது படையினர் உட்பிரவேசித்துள்ளனர்.

அங்கு பலாத்காரமாக புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள பொதுமக்கள் எமது பிரதேசங்களுக்கு வர ஆரம்பித்துள்ளனர். முழு இலங்கையயுமே ஒன்று படுத்துவதற்கு இன்னும் ஒரு சில மணித்தியாலங்களே இருக்கின்றன.

35ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பாதுகாப்பைத் தேடி எம்மை நாடி வருவதையும் அவ்வாறு தப்பிவரும் மக்கள் மீது புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்வதையும் என் கண்களால் பார்வையிட்டேன்.

தமது மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள் உயிரிழந்து கீழே விழுவதை தமது கண்களால் பார்த்துக்கொண்டு வேதனையுடன் மக்கள் தப்பி வருகின்றனர்.

எமது பிரதேசங்களுக்கு வரும் மக்கள் படையினரை கட்டிப்பிடித்து அழுகின்றனர்.

இலட்சக்கணக்கான மக்களை பணயக் கைதிகளாக வைத்திருந்த விடுதலைப் புலிகளின் இறுதித் தருணம் வந்துவிட்டது. மூன்று தசாப்த காலமாக பயங்கரவாதிகளின் குண்டுகள் எங்கு வெடிக்குமோ என அச்சத்துடன் வாழ்ந்த வரலாற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படவுள்ளது என்றார்.

இதேவேளை பிரபாகரன் தனது வன்முறைப் பாதையை கைவிட்டு, ஆயுதங்களை ஒப்படைத்து சரண் அடைந்திருந்தால், அவருக்கும் பொது மன்னிப்பு அளித்திருப்போம்.

ஆனால் பொது மன்னிப்பு தருவதற்கான வாய்ப்புக்களை அவர் நிராகரித்து விட்டார். ஆகவே அவருக்கு பொதுமன்னிப்பு கிடையாது. தனது செயலுக்கான விளைவுகளை அவர் சந்தித்துதான் ஆக வேண்டும் என்றார்.

(ச-3,5)

## நிவாரணப்...

நவம்பர் மாதம்13ம் திகதி 80 ஆயிரம் குடும்பங்களுக்கு தேவையான அரிசி, பருப்பு, சோப்பு உட்பட 10 கோடி ரூபாய் மதிப்பிலான உணவுப் பொருட்களை கப்பலில் அனுப்பியது.

இரண்டாம் கட்டமாக இலங்கை தமிழர்களுக்கு உதவ 40 ஆயிரம் குடும்பங்கள் பயனடையும் வகையில் அரிசி, பருப்பு, சர்க்கரை, சோப்புகள் என ஆறு கோடியே 46 லட்சத்து 16 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான பொருட்கள் சேகரிக்கப்பட்டன.

எம்.வி. கிறீன் மாறல் சரக்கு கப்பலில் உணவு மூட்டைகள், பாத்திரங்கள், உடுபுடைவைகள் என தலா 40 ஆயிரம் மூட்டைகளாக கட்டப்பட்டு ஏற்றப்பட்டன. (ச-5)

## இலங்கையில் போரை நிறுத்த...

இலங்கை பிரச்சினை குறித்து ஆராய பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் உயர் மட்ட ஆலோசனைக் கூட்டம் நேற்று நடந்தது. விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை சரணடைய அரசு காலக்கெடு விதித்துள்ளது. இறுதிக்கட்ட தாக்குதலை நடத்த, மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறச் செய்து வருகிறது. அப்பாவி மக்கள் போரில் கொல்லப்படுவதை கண்டித்து தமிழகத்தில் இன்று கடையடைப்பு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் இலங்கை பிரச்சினை குறித்து ஆராய பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் உயர் மட்ட ஆலோசனைக் கூட்டம் நேற்று இரவு நடந்தது. தேசிய பாதுகாப்பு ஆலோசகர் நாராயணன், வெளியுறவுச் செயலர் சிவசங்கர் மேனன் உள்ளிட்டோர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அனைத்தும் இவ் வாரம் இந்தியா செல்லும் பசில் ராஜபக்ஷவிடம் விளக்கிக் கூறப்படவுள்ளது. இதேவேளை இலங்கை விவகாரம் குறித்து இந்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி கொல்கத்தாவில் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

மொத்தம் 58 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் புலிகள் பகுதியிலிருந்து வெளியேறியதாக தகவல் வந்துள்ளது. எனவே இந்தியாவின் கோரிக்கையை இலங்கை பொருட்படுத்தவில்லை என கூறப்படுவது உண்மையாக இருக்க முடியாது. பயங்கரவாதிகள் விஷயத்தில் இந்தியா எந்த வகையிலும் இரக்கம் காட்டாது. ஆனால் பொதுமக்கள் விஷயத்தில் இரக்கம் உண்டு.

புலிகளிடம் இன்னும் எத்தனைபேர் சிக்கியுள்ளனர் என்பது குறித்து உறுதியான எண்ணிக்கை தெரியவில்லை. மனித உரிமை மீறப்படக் கூடாது என இந்தியா வலியுறுத்தியுள்ளது. போர் நிறுத்தத்தை நீடிக்க வேண்டும் என இந்தியா சார்பில் ஏற்கனவே இலங்கைக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது. அப்பாவி மக்கள் பாதுகாப்பாக வெளியேறவே இதைக் கூறுகிறோம் என்றார் முகர்ஜி. (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.04.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.